
தேவி மானஸ பூஜை

(ஸ்ரீவித்யா மகாயாகக்கிரமம்) * ஞானம்

3/3



நஜன்

பிரதிபா

ரசுரம்

ஸ்ரீ தேவி மானஸ பூஜை

(ஸ்ரீ வித்யா மஹா யாகக்ரமம் — ஞானம்)


(பாவனோபநிஷத் விளக்கமும், ஆம்னாய வியஷ்டி பூஜா முறையும், ஸ்ரீ வித்யா ஸந்த்யா கால பூஜையும், தேவிமான அஷ்டாங்கமும் கொண்டது.)

ஆசிரியர்

ஸ்ரீ வித்யா ஞான பாஸ்கர

நஜன்

(பிரதிபாலக்தா)



ப்ரதிபா பிரசுரம்

துவக்கம்: நவராத்ரி 1973.

பிரசுரித்தவர்

என். லலிதாம்பாள்

பிரதிபா பிரசுரம்

39, ஆடம் தெரு, மயிலாப்பூர், சென்னை-600 004.

Phone : 74720


 [விலை ரூ. 12-00

1982 — 12.00

ஸ்ரீ தேவி மானஸ பூஜை
SRI DEVI MANASA BOOJA

முதற்பதிப்பு — மார்ச் 1982

விலை : ரூ. 12-00



59

பொருளடக்கம்

லக்ஷ்மிராஜ் பிரிண்டர்ஸ்,
21, குயப அருணாகிரி தெரு, சென்னை - 600 014.

சமர்ப்பணம்



உலகப் பேரிரைச்சலிலிருந்து வெகு தூரம் விலகி, தனியறையில், அன்ன, ஆகாரம் எதுவுமின்றி ஒடுங்கி, யோக சமாதியில் நிலைத்து. பிரும்மத்தோடு ஒன்றி, ஆனந்தானுபவத்தில் லயித்து, தவக்கோலத்தில் அமர்ந்திருக்கும் ஸ்ரீ முடிவரம் "பாலயோகி" அவர்கள், இக் கலிகாலத்திற்கு ஒரு புதிர்தான்.

மனிதனுக்கு அத்யாவசியமான பசி, தாகம் இல்லாத நிலையில், சுமார் 40 வருடங்களாக தியானத்தில் ஈடுபட்டு மானஸீக வழிபாடு நடத்தி வரும் இம்மஹானுக்கே

"தேவி மானஸ பூஜை"

என்ற இந்நூலை பக்தியுடன் சமர்ப்பிக்கின்றோம்.

பிரதிபா பிரசுரத்தினர்.

பதிப்பாசிரியர் நன்றி

ஸ்ரீ வித்யா உபாஸனையில் ஞான பாதத்தை விளக்கும் "தேவி மானஸ பூஜை" என்ற நூல், பிரதிபாவின் 59வது புத்தகமாக வெளி வருகிறது. 5 என்பது பஞ்சாக்ஷரம்; 9 என்பது நவாக்ஷரம். சிவ சக்தியின் ஐக்யத்தைக் காட்ட 59 என்ற எண் இப்புத்தகத்துக்கு அமைந்தது பொருத்தமே.

நடராஜா உலக ஸ்ருஷ்டிக்காக, உடுக்கையை முதலில் 5 தடவையும், பின்னர் 9 தடவையும் அடித்ததாகக் கூறப்படுகிறது. இந்த மானஸிக பூஜை, படிப்பில் உயர்ந்தது படிப்படியாகவே ஒருவருக்கு சித்திக்கும். எந்த ஒரு தெய்வத்தையும் மானஸீகமாக வழிபடலாம். அதற்கேற்ற வகையில் கணபதி விஷ்ணு சிவன், சுப்ரமணியம் ஆகிய தெய்வங்களின் மானஸிக பூஜைகளும் இந் நூலில் சேர்க்கப்பட்டுள்ளது. அதோடு தேவியின், ஸ்ரீ சக்ரத்தின் நான்கு திசைகளிலும், மேலும், கீழும் ஆறு ஆம்நாயங்கள் இருக்கின்றன. இங்கு கணக்கற்ற பரிவார தேவதைகள் இருக்கின்றனர். தேவி நவாவரண பூஜையில் ஸமஷ்டி முறையே உள்ளது வியஷ்டியாக பூஜிக்க விரும்புபவர்களுக்கென்றே "ஆம்நாய வியஷ்டி பூஜை"யும் சேர்க்கப்பட்டுள்ளது.

தேஹமே ஸ்ரீ சக்ரம் என்பதை விளக்க "பாவனோப நிஷத்" மானஸ பூஜா முறையும், பாராயணம் செய்வதற்கென்று உபநிஷத் மட்டும் தனியாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

"ஸ்ரீ வித்யா ஸந்த்யா விதி" இப்புத்தகத்தில் இடம் பெற்றிருப்பது முக்கியமான அம்சமாகும். எல்லா தேவி உபாஸகர்களும் எளிதில் புரிந்துக்கொண்டு அனுஷ்டிக்கும் வகையில் "தேவி மான அஷ்டாங்கம்" சேர்க்கப்பட்டுள்ளது.

இந்தப் புத்தகத்துக்கு அருளாசி வழங்கியுள்ள மஹான்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நமஸ்காரங்கள் முகவுரையை ஸ்ருஷ்டிக்கவிருக்கும் வாசகப் பெருமக்களுக்கு எங்கள் நன்றி என்றும் உரித்தாகுக.

இந்தப் புத்தகம் வெளிவருவதில் பெரும்பங்கு கொண்டு பணியாற்றிய பிரதிபாவின் மானஸ புத்திரனும், சிஷ்யனுமாகிய ஸ்ரீ வித்யா ராஜகோபாலனுக்கு அம்பிகையின் திருவருள் என்றும் இருந்துவர பிரார்த்திக்கின்றோம்.

அட்டைப் படத்தை அழகுற அமைத்துக் கொடுத்த ஸ்ரீ சுபா அவர்களுக்கும், குறிப்பிட்ட காலத்தில், நல்ல முறையில் அச்சிட்டுக் கொடுத்த "ஸ்ரீ லக்ஷ்மிராஜ் பிரிண்டர்ஸ்" அவர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றி. வாசகர்களின் எண்ணங்களில் உதயமாகும் முகவுரைக் கருத்துக்களை தெரியப்படுத்தினால், அதனை அம்பிகையின் பாத கமலங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

நன்றி.

மார்ச் 1952
வசந்த நவராத்ரி
சென்னை-4.

என். லலிதாம்பாள்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
குருமகா சன்னிதானம் அவர்களின்

அருளாசி

முகாம் : வத்தலகுண்டு 19—3—82



"அரிது அரிது மானிடராய்ப் றப்பிப்பது அரிது" என்ற முதுமொழிப்படி, அரிதான மனிதப் பிறவியில்தான் கடவுள் வழிபாடு செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. கடவுள் வழிபாடு இரண்டு விதம். அவை புறவழிபாடு, அகவழிபாடு எனப்படும். அகவழிப்பாட்டை மானஸீக பூஜை என்பார்கள். மானஸீக பூஜை மூலம், புறவழிபாட்டில் ஏற்படக்கூடிய பலன்களைக் காட்டிலும், நூறு பங்கு பலன் அதிகம் பெற முடியும்.

ஸ்ரீ ஆதிசங்கரர் "திரிபுரசுந்தரி மானஸ பூஜா" என்று மானஸ பூஜையைப் பற்றி பல ஸ்தோத்திரங்கள் எழுதி இருக்கிறார். சதாசிவ பிர்ம்மேந்திராள் ஸ்வாமிகளும் மானஸ பூஜையைப் பற்றி எழுதி இருக்கிறார். ஸ்ரீ ஆதிசங்கரர் சௌந்தர்ய லஹரியில் ஜபோஜல்பஹா" என்ற ஸ்லோகத்தின் மூலம் மானஸ பூஜையைப் பற்றி குறிப்பிடுகிறார். இப்படிப்பட்ட மானஸீக வழிபாட்டைப் பற்றி இன்னும் அதிகமாக அறிந்து கொள்வதற்கு, எளிய தமிழில் பல நூல்களை வெளியிட்டவரும்—பிரதிபா பிரசுரம் மூலம் நடராஜன் என்ற நஜன் "தேவி மானஸ பூஜை"யென்ற புத்தகத்தை எழுதியிருப்பது கேட்டு சந்தோஷப்படுகிறோம்.

மேன்மேலும் நல்ல நூல்களை வெளியிட்டுக் கொண்டு இருக்கும்படி ஆசீர்வதிக்கிறோம்.

நாராயண ஸ்மிருதி



ஸ்ரீமத் சாந்தானந்த
சுவாமிகள்

ஸ்கந்தாச்ரமம் சேலம்-633014.

அருளாசி

பாரத நன் மக்களனைவரும், ஜகஜ்ஜனனி ஸ்ரீ மாதாவை பாவனையினால் பூஜை செய்தாலே போதும் என்ற ரகசியத்தை, ஸ்ரீ நஜன் அவர்கள், பக்தர்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கி புத்தகம் வெளியிடுவது பற்றி மிகவும் சந்தோஷிக்கிறோம்.

இம்மையில் மனிதன் பிரம்ம மாவதற்கு பாவனை ஒன்றே போதும் என்ற 'உண்மையை பாவனோபநிஷத் விளக்கமாக இந்த நல்ல நூலில் விளக்கியிருக்கிறார்.

இந்த தேகமே ஸ்ரீ சக்ரம். இந்த உடலிலேயே பல கோடிக் கணக்கான தேவதைகள் இருக்கின்றனர் என்ற உண்மையை விளக்கும் வகையில் 'ஆம்நாய வியஷ்டி' பூஜைகளையும் சேர்த்துள்ளார்கள்.

பாவனையினால் மனிதன் கடவுளாகிவிட முடியுமா? என்ற கேள்விக்கு பதில் கூறும் வகையில் மகான்களின் மானஸ பூஜைகளைப் பற்றி விளக்கியிருப்பது நன்மக்களுக்கு நல்லதொரு வழிகாட்டியாகும்.

பூசலார் கட்டிய மானஸீகக் கோயில் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த புண்ணிய பூமியில் உள்ள மக்களனைவரையும், நடமாடும் தெய்வங்களாக்கிவிட வேண்டுமென்கிற பேராசை கொண்டுள்ள 'நஜன்', மக்களின் நலமொன்றையே கருதி, இந்த "தேவி மானஸ பூஜை" என்ற நூலில் 'பாவனோபநிஷத்' ஸாரமனைத்தையும் பிழிந்து கொடுத்திருக்கிறார்கள்.

உண்மையான சிரத்தையும், நம்பிக்கையும் உள்ளவர்களையெல்லாம் இந்த நூல் கடவுளாக்கி வைத்துவிடும் என்பதில் சந்தேகமில்லை. ஸ்ரீ நஜனின் பணி கங்கா பிரவாகம்போல் பெருக்கெடுக்க வேண்டுமென மேலும், மேலும் ஆசிகளை அனுப்பிக்கொண்டேயிருக்கிறோம்.

ஸ்கந்தாச்ரமம்,
சேலம்—14.

ஸ்வாமி சாந்தானந்தா
5-3-82.

அருளாசி



ஸ்ரீ ராஜ ராஜேச்வரி துணை.

ஸ்ரீ-ஸ்ரீ-ஸ்ரீ-திருச்சி
மஹா ஸ்வாமிகள் ஆசியுரை

ஸ்ரீ கைலாச ஆச்ரமம்,
மஹா ஸமஸ்தானம்,
கெஞ்சென ஹள்ளி,
பெங்களூர்-560 089.

மார்ச் 1982.

மனிதன் கடைத்தேறுவதற்கு அம்பிகையை வழிபடுவதொன்றே சிறந்த வழி என்ற ரகசியத்தை அறிந்த ஸ்ரீ வித்யா ஞான பாஸ்கர 'நஜன்' அம்பிகையைப் பற்றி பல அற்புதமான நூல்களை வெளியிட்டு, அதன் மூலம் பலரை அம்பிகை வழிபாட்டில் ஈடுபடுத்தி வருகிறார்.

முன் காலத்தில் படிப்பு என்பது செவி வழியாகவே கேட்கப்பட்டு வந்தது. ஆனால் இக்காலத்தில் புத்தகங்கள் இல்லாமல் முடியாது. அம்பிகையை மானஸீகமாக வழிபடுவது மிக உயர்ந்த படிப்பு போன்றது. அதற்கேற்ற பாடப்புத்தகமே (Text Book) நஜன் இப்போது தந்துள்ள 'தேவி மானஸிக பூஜை' எனும் நூல். இன்னும் பல அரிய புத்தகங்களை வெளியிட்டு, 108 எண்ணிக்கையை பூர்த்தி செய்ய வேண்டுமென்ற நஜன் அவர்களது சங்கல்பத்துக்கு, அந்த சங்கல்பம் நிறைவேற ஆசீர்வதிப்பதுடன், அம்பிகை ராஜ ராஜேச்வரியின் கருணாகடாக்ஷம் நஜன் தம்பதிகளுக்கு ஏற்பட வேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்.

சிவபுரி சுவாமிகள்.

வாசகர்களுக்கு ஒரு வேண்டுகோள்

புத்தகம் வாங்க விரும்புவர் புத்தக விலையை மணியார்டர் செய்யவும். புத்தகம் வி.பி.யில் வரும்போது தபால் செலவு கட்டிப் பெறவும். புத்தகம் பத்திரமாக கிடைக்க இதுவே வழி.

விளக்கங்கள் கேட்டும், சந்தேகங்கள் தெளிவுபடுத்தக் கோரியும், அன்பர்களிடமிருந்து ஏராளமான கடிதங்கள் வருகின்றன. ஒவ்வொரு மாதமும் கடைசிவாரம் பதில் அனுப்பப்படும்.

கைலாச ஆஸ்ரமம் மகா சமஸ்தானம்

பெங்களூர் புறநகர்ப் பகுதியில் கெஞ்சனஹல்லி என்ற அமைதியான இடத்தில் ஸ்ரீ கைலாச ஆஸ்ரமம் அமைந்துள்ளது.

கைலாசம் எப்படி இருக்கும் என்று நமக்குத் தெரியாது. ஆனால் கைலாச ஆஸ்ரம சூழ்நிலையிலிருந்து கைலாசம் இப்படித்தான் இருக்கும் என்று ஊகிக்கலாம். அருளாளர் திருச்சி சுவாமிகள் எனப்படும் சத்குரு சிவரத்னபுரி சுவாமிகள் இங்கு தங்கி தம் அருளைப் பரப்பி வருகிறார்கள்.

பல லட்சம் ரூபாய் செலவில் சுவாமிகள் இங்கு ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரிக்கு ஒரு ஆலயத்தை நிர்மாணித்திருக்கிறார்கள். (இச் சந்நிதியில்தான் 'பிரதிபா'வின் "ஸ்ரீ ராஜராஜேஸ்வரி" என்ற புத்தகம் வெளியிடப்பட்டது.)

ஒரு வேத பாடசாலையும் இங்கு நடைபெறுகிறது. பல மாணவர்கள் இங்கு வேதம் பயில்கின்றனர்.

ஸ்ரீ சுவாமிகளிடம் பயின்ற ஒன்பது பேர் இப்போது பீடாதிபதிகளாக கர்நாடக மாநிலத்தில் வீற்றிருக்கிறார்கள்.

கர்நாடக மாநிலத்தில் இந்த ஆஸ்ரமம் அமைந்ததற்கு விசேஷ காரணம் உண்டு. இம் மாநிலம் சாதுக்களைப் போற்றுகின்றது. கர்நாடகத்தில் மட்டும் 33,000 மடங்கள் இருக்கின்றன. மூன்று சமய ஆச்சார்யர்களாலும் ஆசீர்வதிக்கப்பட்ட இடம். வேதாந்த பாடம் ஆரம்பிக்கு முன் குரு வணக்கமாக 63 சிவனடியார்களையும் வழிபடும் வழக்கம் இம் மாநிலத்தில் உள்ளது. இது ஒரு சக்தி பீடம். இங்கு அம்பிகையின் காது விழுந்த இடம் என்று சொல்லப் படுகிறது.

140 ஆண்டுகள் வாழ்ந்த ஸ்ரீ சிவபுரி மகராஜ் என்ற சுவாமிகளே ஸ்ரீ திருச்சி சுவாமிகளின் குருநாதர். சுவாமிகளுடைய ஞான வாரிசாக அருள்திரு சிவபுரி சுவாமிகள் தயாராகி வருகிறார்கள்.

ஆசிரமத்தைத் தேடி வருபவர்களுக்கு ஸ்ரீ சுவாமிகளின் ஆசியும் அருளும் கிடைக்கின்றன.

இப்புத்தகத்தின் எட்டாவது அத்யாயத்தில் "ஸ்ரீ வித்யா ஸந்த்யா விதி" கூறப்பட்டுள்ளது. செயல் வடிவத்திலேயே உணர்ந்து கொள்ளவேண்டும் என்பதற்காக விளக்கக் குறிப்புகள் தொடுக்கப்படவில்லை. குரு முகமாகத் தெரிந்துக் கொள்ளவும்.

முகவுரை

மானஸீக வழிபாடு நடத்துகின்றவர்களின் பாவனையிலே, அம்பிகையின் ஸூக்ஷ்ம வடிவம், பாவனைக்கேற்ற வகையிலே தோற்றமளிக்கலாம். ஞானச்சுடரிலே ஒளிப்பிரவாகமாக மிளிரும் பரம் பொருளுக்கு பெருமை சேர்க்கும் வகையில், மானஸீக பூஜை செய்பவர்களின் மனதின் வடிவாகிய எண்ணங்களில் தோன்றும் மானஸீகக் கருத்துக்களையே இவ்விடத்தில் நிரப்பிக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

பிரதிபா பிரசுரத்தினர்.

ஸ்ரீமத் சாரதானந்த சுவாமிகள்

அருளாசி

முகாம் கடலூர். 29-3-82

அன்பர் ஸ்ரீ நஜன் ஸ்ரீ வித்யா உபாசகர்களுக்கு அளிக்கும் அரிய பொக்கிஷம் இந்நூல்.

ஸ்ரீ வித்யா உபாசனையின் மிக மேல்படி மானஸிக வழிபாடு. இதற்கு பாவனோபநிஷத் என்றே ஒரு தனி உபநிஷத் உள்ளது. அதன் அர்த்தத்தை மிகவும் எளிய முறையில் விளக்கி இருப்பது மிகவும் போற்றத்தக்கது.

ஸ்ரீ வித்யா ஸந்தியா விதி என்ற பாராயண முறை விவரங்களும் ஆவரண தேவதைகளின் வியஷ்டி பூஜையும் தெரிவிக்கும் நூல்கள் தமிழில் இதுவரை வெளிவரவில்லை. இக்குறையை நஜன் நீக்கி யுள்ளார். அவர் மேலும் இம்மாதிரி அரிய விஷயங்களைக் குறித்து புத்தகம் எழுதி வெளியிட ஸ்ரீ சாரதா தேவியை பிரார்த்தித்து ஆசீர்வதிக்கிறோம்.

சாரதானந்த பாரதி.

மானஸ பூஜை செய்த செம்மல்

மறவாமை யானமைத்த மனக்கோயி லுள்ளிருத்தி
உறவாதி தனையுணரும் ஒளிவிளக்குச் சுடரேற்றி
இறவாத ஆனந்தம் எனுந்திருமஞ் சனமாட்டி
அறவாணர்க் கன்பென்னும் அமுதமைத் தர்ச்சனை செய்தார்.

இறைவனை மறவாமையென்பதே இல்லாத உள்ளக் கோயி லிலே உறைவிடமாக இருக்கச் செய்து, உணர்வெனும் திருவிளக் கேற்றி இடையறாக்களிப்பெனும் ஆனந்தத்தால் திருமுழுக்காட்டி அன்பெனும் அமுதைப் படைத்து அர்ச்சித்து வழிபட்டு வந்தார் ஒருவர்.

அவர்தான் வாயிலார் நாயனார்.

இவர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர். இவரைச் சேக்கிழார், 'தபோதனர்' என்று பெருமைப்படுத்திக் கூறுகின்றார்.

புன்னை மரத்தின் கீழ் அம்பிகை மயில் உருவிலே வழிபட்ட புண்ணியத் தலம் மயிலாபுரி எனும் மயிலாப்பூர். அவ்வூரில் வேளாளர் மரபில் 'தபோதனர்' தோன்றி, அந்தர்யாகம் எனும் அகப்பூஜையிலே நாட்டங்கொண்டு, சிவனருக்குச் சிறப்புப் பணியைச் செய்து, இடையறாக் காதலுடன் வழிபட்டு இறைவனடி (முக்தி) சேர்ந்தவராவார்.

திரு மயிலையில் உருவாகும் "தேவி மானஸ பூஜை" என்ற இப்புத்தகத்துக்கு "வாயிலார் நாயனார்" அவர்களின் அருளாசி வேண்டி வெளியிடுகின்றோம்.

ஆசிரியர் முகவுரை

மனம் வெளுக்க மார்க்கம் உண்டு

பால் நிரம்பிய குடத்தைப் போற்றுகிறோம். கள் குடத்தை தூற்றுகிறோம் அதுபோல மனம் என்ற, குடத்தில் நல்ல எண்ணங்கள் இருந்தால் நல்லவன் என்றும், கெட்ட குணத்தை வைத்தால் தீயவன் என்றும் மனிதன் அழைக்கப்படுகிறான். மனோ பாவத்தின்படிதான் மனிதன் இருக்கிறான். மனதில் சித்தம் இருக்கிறது. சித்தத்தில் பகவான் இருக்கிறான்.

இவன் இருக்க மனம் சுத்தமாக இருக்க வேண்டும்.

சிவம் என்றால் மங்களம்.

சிவம் சிவகரம் சாந்தம் சிவாத்மானம் சிவோத்தமம் |
சிவமார்க்க ப்ரணேதாரம் ப்ரணதோஸ்மி சதாசிவம் ||

"மற்றதெல்லாம் வெளுக்க வழியுண்டு. மனம் வெளுக்க வழியில்லையே"

என்று பாடுகிறார் பாரதியார். அன்பினால் மனதிலுள்ள அழுக்குகளை எரித்து விட்டால் அம்மனம் வெளுத்துவிடும்.

மாயை என்ற மயக்கத்தில் ஆழ்ந்த நாம், நான் வேறு, நீ வேறு, ஊன் வேறு, உடல் வேறு என்று நினைப்பதினால்தான் பிறப்புண்டாகிறது. எந்த இடத்தில் பேதம் உண்டாகிறதோ அந்த இடத்தில் உண்டாவதே பிறப்பு. ஆணவம் தகப்பனார், தாய் ஆசை, கூடப் பிறந்தவர்கள் பஞ்சேந்திரியம். மண், பெண், பொன் என்ற மூவாசையே பெருந்த சம்சார சமுத்திரம். இக்கடலில்தான் நம் வாழ்க்கைப்படகு செல்கிறது. நம்மிடம் உள்ள துர்க்குணங்களே அசுரர்கள். ஜீவனைப் பிடித்தாட்டும் ஆணவாதிகளே அசுரர்கள்.

ஆணவமாகிய அப்பனும் ஆசையாகிய தாயுமே அழுக்கு. ஞானிகளுக்கு தாய் பொறுமை, தைரியம் பிதா. இவர்கள் இருவரையும் பெற்றோர்களாகக் கொண்டு மனதை அடக்கப் பழக வேண்டும்.

அம்பிகையைப் பற்றியும் அவள் திருவிளையாடல் பற்றியும் ஆராய அறிவில் ஆற்றலில்லை. யோகம் செய்ய உறுதியும் வாய்ப்பும் இல்லை. தீர்த்த யாத்திரை செய்ய உடல் பலமும் பண பலமும் இல்லை. ஆகவே அம்பிகையின் அருள் பெற மிகச் சுருக்கமான வழி அவள் திருவடிகளைப் பற்றுவதே.

திருவடிகளைப் பற்றினால் இதரப் பற்றுகள் தானே அற்றுவிடும்.

புலன்கள் ஒரு முகப்படும்போது மனதின் பதைப்பு அற்று விடுகிறது. மனம் அடங்காமையாலேயே பல எண்ணங்களும் அதனால் பிறவிகளும் ஒயாமல் வருகின்றன. மனம் அடங்கிய விடத்து மட்டற்ற சுகமுண்டாகிறது.

மனம் அடங்குவதற்காகவே வழிபாடு, ஜபம், தபம் முதலிய யாவும் நிகழ்த்தப்படுகின்றன.

பாழான என் மனம் குவிய ஒரு தந்திரம்
பண்ணுவது உமக் கருமையோ

—தாயுமானவர்.

இந்த மானஸிக பூஜை ஒரு தவம். மனிதனுக்கு தவத்தினுஞ் சிறந்த பொருள் வேறு யாதொன்றுமில்லை. உயிருக்கு உறுதி செய்வது தவமே. நிக்ரகானுக்ரஹ சக்தி தவத்தால் வரும்.

தவம் செய்பவரை கூற்றுவனும் கும்பிடுவான். தவத்தின் ஆற்றலால் விஸ்வாமித்ரர் தனி உலகையே படைத்தார். தபோ பலமுடையவருக்கு ஐம்பெரும் பூதங்களும் அடக்கம்.

மஹா யாகக் கிரமம் என்பது பாஹ்ய நவாவரண பூஜை, ஸ்ரீ வித்யா ஹோமம், குண்டலினி யோக மானஸிக பூஜை இந்நான்கும் கொண்டது. பாஸ்கரராயர் தன் லலிதா ஸகஸ்ரநாம பாஷ்யத்தில் ஸ்ரீ வித்யை மூலம் மஹா வித்யைகளைப் பெற்று ஆத்ம வித்யையைப் பெற வேண்டும் என்று ஆத்ம வித்யா, மஹா வித்யா, ஸ்ரீ வித்யா என்ற நாமாக்களுக்கு அர்த்தம் எழுதியிருக்கிறார்.

ஆம்நாய வியஷ்டி பூஜை இதில் சேர்க்கப்பட்டுள்ளது. இது மிகவும் சிரேஷ்டமானது. அவ்வளவு தெய்வங்களின் மூல மந்திரங்களும் இதில் வந்து விடுகின்றன.

"பாவிப்பது போதும் பரமநிலை எய்துவதற்கே"

பாவனையாக அம்பிகையை வழிபடுவது மிக உயர்ந்த நிலை. இந்த நிலை வந்தவர்கள் செய்கைகள் எல்லாம், அம்பிகையின் வழிபாடே. பேசுவதெல்லாம் அம்பிகையின் நாமங்களே. நடப்பதெல்லாம் அம்பிகையை பிரதக்ஷிணம் செய்வதே. இதையே சங்கரர், தமது 'ஸௌந்தர்ய லஹரீ'யில் 'ஜபோ ஜல்ப' என்று ஆரம்பமாகும் சுலோகத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

மஹா யாகக்ரமத்தின் நான்காவது (துரீய) கட்டம் இந்த பாவனா பூஜை. இதற்கு ஆதாரமாக விளங்குவது பாவனோபநிஷத். தேவியும், அவளுடைய பரிவார தேவதைகளும், நவாவரண பூஜையில் அர்ச்சிக்கப்படுகின்றார்கள். ஹோமத்தில் 'ஸ்வாஹா' என்று

ஆஹுதி செய்யப்படுகிறது. ஆனால், இங்கு மானஸீகமாக கல்பித்து அர்ச்சனை செய்யப்படுகிறது.

சுத்தமும், அசுத்தமும் மனதில்தான் தோன்றுகிறது. 'போதும் என்ற மனமே, பொன் செய்யும் மருந்து' என்பர். எவ்வளவு கிடைத்தாலும் திருப்தியற்ற மனம், நிறைவற்ற குறைவுடைய மனம், ஆசைக்கு அடிமையான மனம் எப்பொழுதும் குறைவுள்ளதாகவே இருக்கும். மனதை வென்றால்தான் ஆனந்தமடையலாம்.

'மனதிற்குள் மனமறியாமல் நான் இருக்கிறேன். கவலையை விடு. நான் பார்த்துக் கொள்கிறேன்' என்கிறாள் அம்பிகை.

மனதினால் அம்பிகையிடம் உறவு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். பக்தியில் நுனிப் புல் மேய்வதில் பலனில்லை. ஆழ்ந்த பக்தி வேண்டும். தாளத்தில் மனம் வைத்து பஜனை செய்தால் மனோலயம் ஏற்படாது. அம்பிகையிடம் மனம் வைத்து பூஜித்தால், தாளம் தானே வரும். மனதினால் அம்பிகையின் சம்பந்தத்தைப் பெற வேண்டும்.

சம்பந்தம் என்றால் என்ன ? ஞான சம்பந்தம்தான். நீயும், நானும் சமம் என்பதே சம்பந்தம். ஞானத்துடன் மனம் சம்பந்தப் படவேண்டும். மனதைக் கொண்டு இந்த சம்பந்தத்தைப் பெற வேண்டும்.

அம்பிகைக்கு ஸ்தூலம், ஸூக்ஷ்மம், பரம் என்று மூன்று முக்கிய மான ஸ்வரூபங்கள். சரியை, கிரியைகளாக ஸ்தூலரூப உபாசனை யும், யோகத்தில் குண்டலினி பிரபோதமும் செய்து பழக்கப்பட்ட பின்பு, ஞானம் பெற்று, மானஸீகமாகப் பூஜை செய்ய வேண்டும்.

இப்பூஜையே பராருப வழிபாடு. லலிதா ஸஹஸ்ர நாமத்தில் 'உத்யத்பானு' ஸகஸ்ராபா' என்பது முதல் 'ஸர்வாபரண பூஜிதா' வரை அம்பிகையின் ஸ்தூல ரூபம். 'ஸ்ரீமத் வாக்பவ கூடைக' முதல் அம்பிகையின் மந்த்ர, யந்த்ர ரூபமான ஸூக்ஷ்ம ரூபங்கள் கூறப்படுகின்றன. மாத்ருகைகளும் அம்பிகையின் ஸூக்ஷ்ம வடிவமே.

வாஸனா வடிவமான ஆத்மாவின் பிரும்ம சைதன்யம் மூன்றாவ தான பராருபம். இந்த பராருபத்தை பூர்வ புண்ணிய வசத்தினால் தான் ஒரு சிலர் அறிய முடியும். இந்த 'பரா' ரூபத்தை உபாசிக்க முதலில் மந்திரம், சக்ரம். பூஜை இவைகளை நன்கு அறிந்து அனுஷ்டித்திருக்க வேண்டும்.

பரதேவதையின் ஸ்தூலரூப் பாஹ்ய பூஜையை வெகுகாலம் அனுஷ்டித்து, வழிபட்டு வந்த உபாஸகர்களுக்கே பரா ரூபத்தை தியானிக்க முடியும்.

பரதேவதையின் பரரூபமான வாஸனையை,

> அதீதம் து பரம்தேஜ : ஸ்வ ஸம்வித்துதயாத்மகம்
> ஸ்வேதாவிகமயோல்லோக கஸிதம் விச்வருபகம்
> சதன்யம் ஆன்யனேருபம் நிஸர்க்கானந்த ஸுந்தரம் ||

பிரபஞ்ச தீதமாயும், சூரியன், சந்திரன் முதலிய ஜடப்பிரகாச பொருள்களுக்கும் பரமான பிரகாச ரூபிணியாகவும், ஞான மாத்திர மாக எப்பொழுதும் விளங்குவதாயும், தனது இச்சா மாத்திரத்தினுல் பிரபஞ்சத்தை சிருஷ்டித்து அதன் வடிவமாகவே விளங்குபவளும், ஆன்ம வடிவ ஞானனந்த வடிவினளாயும் விளங்குகின்றனள் என்று 'யோகிநீ ஹ்ருதயனம்' கூறுகின்றது.

பேதத்தில் ஒரு பூஜை. அபேதத்தில் ஒரு பூஜை. வேற்றுமை யில் இருக்கும் அம்பிகையை, வேற்றுமையாக, அவளுருவான பிம்பங்களில் பூஜிப்பது ஒரு முறை. அது பாஹ்ய பூஜை. மனதில் பாவித்து பூஜை செய்வது ஆத்ம பூஜை.

ஆத்மாத்வம் கிரிஜா மதி : பரிஜனப்ராணு சரீரம், கிருஹம் பூஜா தே விஷயோப போக ரசனு நித்ரா ஸமாதி ஸ்திதி : | சஞ்சார : பதயோ ப்ரதக்ஷிண விதி : ஸ்தோத்ராணி ஸர்வாகிரோ யத் யத் கர்ம கரோ மிதத் அகிலம் சம்போத வராதனம் ||

—ஆதிசங்கரர்.

சிவன், ஆத்மாவாக இருக்கிருர். அம்பிகையே புத்தி. பரி ஜனங்கள் பஞ்சபூதங்களும், பிராணனும். பிராணனுக உலகில் விளையாடுவது சிவமும், சக்தியும்.

இந்த உண்மையையறிந்து, அன்பர்கள் இப்பூஜையில் ஈடுபட்டு முக்திக்கு வழி காண வேண்டும். இவ்வெண்ணம் ஈடேறினுல் இப்புக்தம் எழுதியதன் குறிக்கோள் நிறைவுபெறும்.

ஓம் தத் ஸத் ||

மயிலாப்பூர், 'ஜஜன்'
ஏப்ரல் 198–.

ஏழாவது அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள 'ஆம்னய வியஷ்டி பூஜா விதான'த்தில் ஆறு ஆம்னயங்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன. அதில் முதல் நான்கு ஆம்னயங் களை பஞ்சதசீ உபதேசம் பெற்றவர்களும், ஆறு ஆம்னயங் களையும் ஷோடசீ உபதேசம் பெற்றவர்களும் பூஜிக்க வேண்டும்.

ஸ்ரீஸதாசிவ ப்ரம்மேந்திரர் செய்த மானஸ பூஜை

ராகம்—சாமா தாளம்—ஆதி.

பல்லவி

மானஸ ஸஞ்சரரே ப்ரஹ்மணி மானஸ ஸஞ்சரரே

அநுபல்லவி

மதசிகி பிஞ்ச அலங்க்ருத சிகுரே
மஹநீய கபோல விஜித முகுரே —(மானஸ)

சரணம்

ஸ்ரீ ரமணீ குச துர்க விஹாரே
ஸேவக ஜன மந்திர மந்தாரே
பரமஹம்ஸ முக சந்த்ர சகோரே
பரிபூரித முரளீ ரவதாரே —(மானஸ)

ராகம்—சாவேரி தாளம்—ஆதி

பல்லவி

பஜரே யதுநாதம் மானஸ பஜரே யதுநாதம்

சரணம்

1) கோபவதூ பரிரம்பண லோலம்
கோப கிசோரகம் அத்புத லீலம் —(பஜ)

2) கபடாங்கீ க்ருத மானுஷ வேஷம்
கபட நாட்ய க்ருத குத்ஸித வேஷம் —(பஜ)

3) பரம ஹம்ஸ ஹ்ருத் தத்வ ஸ்வரூபம்
ப்ரணவ பயோதர ப்ரணவ ஸ்வரூபம் —(பஜ)

ராகம்—மோஹனம் தாளம்—ஆதி

பல்லவி

பஜரே ரகுவீரம் மானஸ பஜரே ரகுவீரம்

சரணம்

1) அம்புதடிம்ப விடம்பன காத்ரம்
அம்புஜவாஹன நந்தன தாத்ரம் —(பஜரே)

2) குசிக ஸுதார்பித கார்முக வேதம்
வசிஹ்ருதயாம்புஜ பாஸ்கர பாதம் —(பஜரே)

3) குண்டல மண்டன மண்டித கர்ணம்
குண்டலி மஞ்சகம் அத்புத வர்ணம் —(பஜரே)

4) தண்டித ஸுந்த ஸுதாதிக வீரம்
மண்டித மனுகுலம் ஆச்ரய பௌளிகம் —(பஜரே)

5) பரமஹம்ஸம் அகிலாகம வேத்யம்
பரமவேத மகுட ப்ரதி பாத்யம் —(பஜரே)

ஆத்மாவைக் கண்டோர்க்கு
அகப்பூஜை எளிதாமே !

கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின் ? —(குறள்)

எவ்வளவுதான் ஒருவன் வரம்பற்ற கல்வியைப் படித்திருந்த போதிலும், பரம் பொருளின் பாத கமலங்களை நாடிப்பிடித்து, தொழுது பயன் பெறவில்லையென்றால் அவன் கற்ற கல்வியினால் பயன் ஏது? ஏதுமில்லை. ஆகையால் பரம்பொருளைத் தெரிந்துக் கொள்ளவும், ஆத்மாவை அறிந்து கொள்ளவும், ஒருவனுக்கு ஞான குரு அவசியம் தேவை. அந்த ஞானகுருவால்தான் சித்தத்தில் தெளிவு ஏற்படும். புத்தியின் மயக்கம் அறுபடும். மனத்தையும் அழிக்க முடியும்.

சுவேதகேது எல்லாம் கற்றவராயிருந்தும், தன் மகனை ஆசாரியனிடம் சேவை செய்ய அனுப்பியதும், பதினெட்டு வித்தைகளை பழுதறக் கற்றிருந்த நாரதரிஷி, ஆத்மாவைக் காணும் பொருட்டு சனத்குமாரரை குருவாக அடைந்து ஆசாரிய சேவை செய்ததும் இதற்கு சான்றாகும்.

குருவை அடைந்தவன் குருவினிடம் அபார பக்தியும், நம்பிக்கையும் வைக்க வேண்டும். நம்பிக்கையின் சக்தியே கண்ணைத் திறக்கும். அப்பொழுது ஊனக்கண் காணாததை ஞானக்கண்ணால் காண முடியும். ஒரு சிறிய விதையினுள், ஒரு பெரிய மரம் இருப்பதை ஊனக்கண் காணாவிட்டாலும், ஞானக்கண் காண்கிறது. விதையினுள் மரமும், மரத்தில் பூவும் வாசனையும், நிறமும், அதனுள் விதைகள் நிறைந்த கனிகள் உண்டாக்கும் சக்தியும் அமிழ்ந்துக் கிடக்கின்றன.


இந்த அதிசயத்தை ஆழ்ந்து சிந்தித்தால், ஸூக்ஷ்மமாகிய ஆன்ம சக்தியில் எல்லாம் ஒடுங்கியிருக்கும் ரகசியத்தை ஒருவாறு உணரலாம்.

உண்மைப் பொருளின் அறிவு, அதை விரும்பி நாடாதவனுக்கு ஒரு போதும் கைகூடாது. பழுதையில் தோன்றும் பாம்புக்கு பாடம் போட்டால் போகுமா? போகாது. அதை அறிவால்தான் போக்க வேண்டும்.

ஒரு கம்பியில் மின்சக்தி பாய்ந்து செல்ல வேண்டுமானால் அது பூமியைத் தொடாமலிருக்க வேண்டும். அதுபோல மனதில் ஞான சக்தி மிளிர வேண்டுமானால், அது உலக விஷயங்களில் பற்றை விட வேண்டும்.

எனவே, "இந்த தேவி மானஸ பூஜை" என்னும் இந்த நன்னூலை படிக்கப்போகும் அன்பர்கள் தாங்கள் இன்புறுவதோடு, மற்றவர்களையும் இன்புறச் செய்து, மானஸ பூஜையில் ஈடுபட்டு, பெறுதற்கரிதான வீடுபேற்றைப் பெற வேண்டுமென்று, பரதேவதை லலிதையிடம் பணிவன்புடன் பிரார்த்திக்கின்றேன்.

குருபாதரேணு,
ஸ்ரீ வித்யா ராஜகோபாலன்.



தேவி மானஸ பூஜை 1

ஸ்ரீ வித்யா மஹாயாக க்ரமம்—ஞானம்

அலையும் மனதை அகத்தடக்கும்
அவனே சரியை கடந்தோனும்
அலையும் மனதை அகந்தடக்கும்
அவனே கிரியை முடித்தோனும்
அலையும் மனதை அகத்தடக்கும்
அவனே யோக தத்பரனும்
அலையும் மனதை அகத்தடக்கும்
அவனே ஞானி அதிசூரன்.

அம்பிகே! உன்னை மானஸீகமாக பூஜிப்பதாமே? அது எப்படி?

பரப்ரஹ்மமாகிய உன்னை எவ்விதம் ஆவாஹனம் செய்வேன்?

நீயே எல்லாவற்றிற்கும் ஆதாரம். உனக்கு ஆதாரம் எதுவும் இல்லை. [நிராதாரா] உனக்கு எப்படி ஆசனம் அளிப்பது?

எல்லா தத்துவங்களும் நீயே. உனக்கு அர்க்ய, பாத்ய ஆசமனாதிகளை எப்படிக் கொடுப்பது? பரிசுத்தமாக உள்ள உன்னை இந்த ஜலத்தினாலா ஸ்நானம் செய்விப்பது?

எல்லா திக்குகளிலும் நிரம்பிய திகம்பரீ நீ. உனக்கு எவ்வாறு புடவை கட்டுவது? அவயவங்களே இல்லாத உனக்கு எங்ஙனம் ஆபரணங்களை அணிவிப்பது? நிர்லேபாவான உனக்கு எப்படி சந்தனம் பூசுவது? நிரஞ்சனியான உனக்கு எப்படி தூபம் காட்டுவது? சூரிய, சந்திரர்களையே பிரகாசிக்கச் செய்பவள் நீ. உனக்கா கற்பூரம் காட்டுவது?

ஆதியந்தமில்லாத உனக்கு எந்த மந்திரங்களைச் சொல்லி புஷ்பம் சாத்துவது? எல்லாவற்றையும் படைப்பவள் நீ. உன்னிடம் இல்லாதது எது? எதை நான் நைவேத்யமாகத் தருவது?

உலகில் நீ இல்லாத இடமில்லையே. எப்படி உன்னை வலம் வருவது? ச்ருதி வாக்குகளுக்கு எட்டாத உன்னை எப்படி ஸ்தோத்தரிப்பது?

"வழி கண்டுபிடித்துவிட்டேன்" என்கிறார் ஆதிசங்கரர்.

எல்லா ஆசைகளையும் விட்டுவிடுவதே உன்னை ஆவாஹனம் செய்வது.

எங்கும் நிறைந்திருக்கும் ப்ரஹ்மமே சத்யம். ஜகத் மித்யை என்ற ஞானமே ஆஸனம்.

நிச்சிந்தையாக இருப்பதே அர்க்கியம்.

மனம். சங்கல்ப விகல்பமில்லாமல் பரிசுத்தமாக இருப்பது ஆசமனியம்.

ஸதா தியானத்தில் இருப்பதே ஸ்நானம்.

ஸர்வம் ப்ரஹ்மம் என்ற நினைவே கந்தம்.

திருஷ்டி பிரஹ்மத்திலிருந்து அகலாதிருப்பதே அக்ஷதை.

அம்பிகை, குரு, நான் என்கிற பேதமின்றி இருப்பதே அர்ச்சனை. ஸமஸ்த வாஸனா த்யாகம் தூபம்.

நானே ஜோதிர் மயமானவன் என்ற ஞானம் தீபம். நானே ப்ரஹ்மம். ப்ரஹ்மமே நான் என்கிற லயமே நைவேத்யம்.

ராக விஷயாதி யாகமே தாம்பூலம். அஞ்ஞானமாகிய இருட்டுக்கு, சூரிய வெளிச்சமாகிய நானே ப்ரஹ்மம் என்ற ஞானமே கற்பூர நீராஜனம்.

'பரிபூர்ண ஆனந்தமே நான்'—என்கிற பாவனை புஷ்பாஞ்ஜலி.

ஆயிரக்கணக்கான பிரும்மாண்டத்தில் நான் இருக்கிறேன் என்ற தியானமே பிரதக்ஷிணம்.

ஹம்ஸ பாவத்தை அறிந்து, ஸோஹம் பாவத்தில் இருப்பதே தியானம். நான் வேறு, அம்பிகை வேறு அல்ல, என்பதே வந்தனம்.

நாம ரூபங்களுக்கு அப்பாற்பட்டவனே நான் என்கிற கீர்த்தனமே நாம ஸங்கீர்த்தனம்.

இதுவே நிர்க்குண மானஸ பூஜை.

அம்பிகை என்பவள் யார்?

இது என்ன கேள்வி?

இந்த உலகை சிருஷ்டித்தும், அதன் உள்ளும் வெளியும், ஒவ்வொரு ஜீவன்களிலும் இருந்துக்கொண்டு எல்லாவற்றையும் ஆட்டி வைக்கும் ''சக்தி'' தான் அம்பிகை.

அவளைப்பற்றி முழுவதும் தெரிந்தால்தான், அவளை இம் மனத்திற்குள் கொண்டு வரமுடியும். ஆகவே, அவளை அறிவோம்.

பக்த்யா மாமபி ஜாநாதி
யாவாந்யஸ் சாஸ்மி தத்வத:|
ததோமாம் தத்வதோஜ் ஞாத்வா
விசதே த ந நந்தரம்||

அம்பிகை யார்? எத்தகையவள்? என்பதை நாம் அவளிடம் காட்டும் பக்தியினால்தான் அறிந்துக் கொள்ளமுடியும். அவளை தெரிந்துக் கொள்ளாமல் எப்படி பக்தி செய்வது? பக்தியினால்தானே அவளைத் தெரிந்துக் கொள்ளமுடியும். இது என்ன? நெய்க்குத் தொன்னை ஆதாரமா? தொன்னைக்கு நெய் ஆதாரமா? என்பது போலல்லவா தோன்றுகிறது.

பக்தி செய்ய வேண்டுமென்றால் அம்பிகையைப்பற்றி பொதுவாகத் தெரிந்துக்கொண்டால் போதும், தத்துவ ஸ்வரூபம் தெரிந்துக்கொண்டுதான் பக்தி செய்யவேண்டும் என்பதில்லை.

அம்பிகை இந்தக் கோவிலில், இந்தச் சிலையில்தான் இருக்கிறாள்; வேறு எங்குமில்லை என்ற நினைவில்தான் பக்தி வரவேண்டும். இப்படி பக்தி செய்து வந்தாலே உண்மையான பக்தி தானே வந்துவிடும். உண்மையான பக்தி வந்தவுடன் அவள் கோவிலில் மட்டும் இல்லை; அவள் இல்லாத இடமே இல்லை என்ற ஞானம் வந்துவிடும். அவள்தான் நம் இருதயத்திற்குள்ளேயே இருக்கிறாளே என்ற ஞானம் இதன் விளைவாக ஏற்படும்.

அப்படி ஞானம் வந்தவர்களே மானஸிக பூஜை செய்வதற்கு தகுதி பெற்றவர்கள்.

அம்பிகையை மானஸிகமாக பூஜிப்பது மிக உயர்ந்த பூஜா முறை.

ஆதிசங்கரர் ஷண்மதங்களை அமைத்து, வழிபாட்டுக்கு வழி செய்தார் என்றாலும், அவருடைய இஷ்ட தெய்வம் அம்பிகைதான்.

காணுபத்யம் என்பது கணபதியை பிரதானமாக வழிபடும் முறை. அக் கணபதியும் சித்தி, புத்தி, வல்லபை என்ற சக்திகளின் உதவியைக் கொண்டே அநுக்ரஹம் செய்ய வேண்டியிருக்கிறது.

கௌமாரம் முருகனை வழிபடும் முறைகளைக் கூறுகிறது. அவரும் வள்ளி, தேவசேனு சக்திகளைக் கொண்டே அருள் பாலிக்க வேண்டியிருக்கிறது.

வைஷ்ணவத்தில் ஸ்ரீமந் நாராயணனே பிரதான தெய்வம். அவரும் ஸ்ரீதேவி, பூதேவி சக்திகளைக் கொண்டே பக்தர்களின் இஷ்டங்களை நிறைவேற்றுகிருர்.

ஸௌரத்தில் சூரியபகவான் பிரதான தெய்வம். அவரும் சாயா, சுவர்ச்சலாம்பா தயவைக் கொண்டே அருள் செய்கிருர்.

சைவத்தில் சிவபெருமான் முக்கியமான தெய்வம். சக்தி யில்லையேல் அவர் சிவனே என்று கிடக்க வேண்டியிருக்கிறது.

ஆகவே, ஆதிசங்கரர் இந்த பஞ்ச சக்திகளையும் சமஷ்டியாக, அன்னை பராசக்தியாக உருவாக்கி சாக்த வழிபாட்டை ஏற்படுத்திஞர்.

ஸ்ரீவித்யை உபதேசத்தை குரு முகமாகப் பெற்று, நிறைய நவாவரண பூஜைகள் செய்து நல்ல அனுபவம் பெற்றவர்கள், அம்பிகையை மானஸிகமாக வழிபடும் இக்கட்டத்தை அடைய முடியும்.

இந்த மானஸிக வழிபாட்டை மூன்ருகப் பிரிக்கலாம். (1) தியானம் (2) பூஜை (3) ஹோமம்.

தியான வழி

மனம் அடங்க முதலில் தியான வழியை பின்பற்ற வேண்டும்.

"மனம் போன போக்கெல்லாம் போகவேண்டாம்" என்பது பழமொழி. மனம் சஞ்சலமே உருக்கொண்டது. அது எங்கே வேண்டுமானுலும் நினைத்த மாத்திரத்தில் செல்லக்கூடியது.

ராஜ்யத்தைப் பெற்று ஆள்வது மிகக் கடினம். ஆனுல் ஒரு நொடியில் அதை நிறைவேற்றுகிறது மனம். மனேராஜ்யம் என்று இதைத்தான் சொல்லுகிருர்கள்.

அளவுக்கு மிஞ்சிய கற்பனையே மனதுக்கு உயிர்நாடி. மனதை அடக்கி, அதை அறவழியில் செலுத்தி, நிலை நிறுத்தினால் தான் மனிதன் உய்யவும், பிறப்பு இறப்பு என்ற பந்தத்திலிருந்து விடுதலையடையவும், நித்யானந்தத்தில் திளைக்கவும் முடியும் என்று போதித்தார்கள் நம் முன்னோர்கள்.

மனதைக் கட்டுப்படுத்தி, அதை அடக்கி ஆளும்போதுதான் மனிதன், சிறந்த அறிவாளி, ஞானி என்றெல்லாம் போற்றப்படுகிறான். மனதிற்கு அடிமையாகி அதன் வழிச் செல்லும்போது பைத்தியம் எனப் பெயர் பெறுகிறான்.

''நமः மநः மநः நமः'' என்பது மேலான உயர்ந்த தத்துவம். ஆதிசங்கரர், மனதால் செய்யும் பூஜை ஒருநிலைப்படுத்திய மன நிலையை அருளும் என்கிறார்.

இப் பூஜையில் நெஞ்சமே ஆலயம். நினைவே சுகந்தம். அன்பே திருமஞ்சன நீர்.

உடம்பில் இருதயம், உந்தி, புருவம் இம் மூன்றும் முறையே பூஜை ஸ்தானம், ஹோம ஸ்தானம், தியான ஸ்தானம் என்று கருதி பூஜை செய்யப்பட வேண்டும். மூல மந்திரத்தைச் சொல்லி இருதயத்தில் இஷ்ட தெய்வத்தை எழுந்தருளச் செய்யவேண்டும்.

முதலில் காமம், கோபம் முதலியவைகள் இல்லாமல் மனம் சுத்தியடைந்து, சுத்தி பெறவேண்டும். மனம் சுத்தமானால் இடம் சுத்தமாகும். கண், காது முதலிய இந்திரியங்களுக்கு இடமளிக்காமல் இருந்தால்தான் மானஸீக வழிபாட்டினால் பலன் உண்டு.

மனம், மொழி, மெய்களால் இறைவனை வழிபட்டு உய்ய வேண்டியது மனிதர் கடமை.

பஞ்ச சுத்தி : நியாஸம், பூதசுத்தி முதலியன* இறைவனின் அருள் கிடைக்க இடைஞ்சலாக உள்ளவைகளை அகற்றி, மனம், உடல், வாக்கு இவைகளைச் சுத்தப்படுத்துவது.

பூதசுத்தியில் சாதகன் தன் தேகத்திற்கு மேலே 12 அங்குல உயரத்தில்,

ஸுஷும்ளு தக்ஷிணத்வாரான் நிர்கமய்ய ஹரிம் பஹி:|
ஸஹஸ்ரரபி ஸங்காசம் வ்ருத்தமண்டல மத்யகம்||
தப்த காஞ்சன வர்ணுபமாஸனம் பரமே பதே|
மந்த்ராத்மானம் து தம் த்யாத்வாஹ்யுபரி த்வாதசாங்குலே||

* பிரதிபாவின் ''தேவி நவாவரண பூஜை''யில் காணவும்.

என்று தியானம் செய்து, நாபியில் கவச மந்திரத்துடன் கூடிய வாயுவை தியானம் செய்து, அந்த வாயுவின் வேகத்தில் உடம்பு முழுவதும் வறண்டு விட்டதாக நினைக்கவேண்டும். பின் அக்னியை தியானித்து, அதன் ஜாஜ்வல்யமான ப்ரகாசத்தினுல் தேகம் பஸ்மீகரமாகி விட்டதாக எண்ணி, பின்னர் ஹிருதய மந்திர பிரபாவத்தினுல், இதே தேகம் ஆகாயத்தை அடைந்து விடுவதாக எண்ணி, பின் முத்துப்போன்ற தெளிவான ஜலத்தை தியானித்து, அந்த ஜலத்தினுல் பஸ்மம் நனைவதாகப் பாவித்து தாமரையில் பஞ்சபூதமான சரீரம் உற்பத்தியானதாகக் கருதி, பின் கர, அங்கந்யாஸங்கள் செய்ய வேண்டும். இதைத்தான் மானஸிக யாகம் என்பர்.

ஸ்ரீ வித்யா தியானம்

பிரளய காலத்தில் தோன்றும் அக்னியைப் போன்ற காந்தி மூலாதாரத்திலிருந்து அநாகதத்தைத் தொடுகின்றது. இதுவே முதல் கூடம்.

கோடி சூர்யப் பிரகாசம் போன்ற மற்றொரு காந்தி அநாகதத்திலிருந்து ஆக்ஞை (புருவநடு) வரை தொடுகிறது. இது இரண்டாவது கூடம்.

சந்திரனைப் போன்ற ஒளி மிகுந்த மற்றொரு காந்தி ஆக்ஞை முதல் நெற்றிவரை வியாபிக்கிறது. இதுவே மூன்றுவது கூடமாகும்.

இதுவே ஸ்ரீ வித்யை மந்திர ரூபமான தியானம்.

பாலாபீஜத்தில் முதல் பீஜமான (ஐம்) வாக்பவ பீஜமும், ஸ்ரீ வித்யையில் முதல் கூடமான [கஏஈலஹ்ரீம்] வாக்பவ கூடமும், பாலசூரியனைப் போன்ற காந்தியோடு, மூலாதாரம் முதல் அநாகதம் வரை தியானிக்கப்பட வேண்டும்.

இரண்டாவது அக்ஷரமான காமராஜ பீஜமும் (க்லீம்) ஸ்ரீவித்யையில் இரண்டாவது கூடமாகிய காமராஜ கூடமும் [ஹஸகஹல ஹ்ரீம்], பல வர்ணங்களோடு, அநாகதம் முதல் ஆக்ஞை வரை தியானிக்கப்பட வேண்டும்.

மூன்றுவது பீஜமாகிய சக்தி பீஜமும் (ஸௌ:) ஸ்ரீ வித்யையின் மூன்றுவது கூடமாகிய சக்தி கூடமும் (ஸகலஹ்ரீம்) பூரண சந்திரப் பிரகாசத்துடன், ஆக்ஞையிலிருந்து, ப்ரஹ்மரந்திரம் வரை வியாபித்துள்ளதாகத் தியானிக்க வேண்டும்.

இதைத்தான் பின் கண்ட 'வரிவஸ்யா ரஹஸ்ய*' சுலோகம் தெரிவிக்கின்றது.

---

* "வரிவஸ்யா ரஹஸ்யம்" தனிப் புத்தகமாக விரைவில் வெளிவரவிருக்கின்றது.

ப்ரளயாக்னி நியம் ப்ரதமம்
மூலாதாரம் தனுகதம் ஸ்ப்ருசதி|
தஸ்மா தாஜ்ஞாசக்ரம் த்விதீய
கூடம் து கோடி ஸூர்யாபம்||

தஸ்மாத் லலாட மத்த்யம்
தார்த்தீயம் கோடி சந்த்ராபம்|
மாலா மணிவத வர்ணா
க்ரமேண பாவ்யா உபர்யுபரி||

நைஸர்க்கிகீ ஸ்புரத்தா விமர்ச
ரூபாஸ்ய வர்ததே சக்தி:|
தத்யோக தேவ சிவோ
ஜகதுத்பாதயதி பாதி ஸமஹரதி||

அம்பிகை சந்திரனைப் போன்ற வெண்மை நிறத்துடன் சிரஸில் இருக்கின்றாள். வானவில் போன்ற பலவர்ணங்களுடன் நெற்றியிலும், சூரியனைப் போன்ற சிவந்த நிறத்துடன் இருதயத்திலும் இருக்கிறாள்.

சிரஸ், நெற்றி, இருதயம், இம்மூன்று இடங்களிலும் அம்பிகையைத் தியானம் செய்யவேண்டும்.

மூர்த்னி ஸ்புரத் துஹிந தீதிதி தீப்தி தீப்தம்
மத்யே லலாட மமராயுத ரச்மி சித்ரம்
ஹ்ருச் சக்ர சும்பி ஹுதபுக்கணி காநுகாரி||
ஜ்யோதிர்ய தேததித மம்ப தவஸ்வரூபம்||

—சர்ச்சா ஸ்தவம்; காளிதாஸன்.

மானஸ பூஜை

நம் உடலை ஆலயமாக எண்ணித் தனது இருதயக் கமலத்திலுள்ள இறைவன்/இறைவியைப் பூஜிக்க வேண்டும்.

ஆராதயாமி மணிஸந்நிப ஆத்மலிங்கம்
மாயாபுரீ ஹ்ருதய பங்கஜ ஸன்னிவிஷ்டம்
ச்ரத்தா நதீவிமல சித்தஜலாபிஷேகை:
நித்யம் ஸமாதி குஸுமை: ந புனர்பவாய||

''மாயாபுரி எனும் நமது உடலில் ஹிருதயம் என்ற தாமரைமீது வீற்றிருப்பவரும், மணிக்குச் சமமாக இருக்கும் ஆத்மலிங்கத்தை சிரத்தை என்னும் நதியிலிருக்கும் சுத்தம் என்ற ஜலத்தால் அபி

ஷேகம் செய்து சமாதி என்ற புஷ்பங்களால் புனர்ஜன்மம் இல்லாமல் இருப்பதற்காக ஆராதிக்கிறேன்.''

நெஞ்சத் தாமரை முதலிய இடங்களில் இறைவன் திருவுருவைக் கற்பித்து அகக் கண்ணுல் கண்டு தான் அழிய நிற்பது ஆதார யோகம். இப்பாவனை இல்லாதபோது, அக் கற்பனை உருவமும் மறைந்துவிடும். ஞானப் பசிக்கு இது படிக்கட்டு போன்று அமையும். நிராதார யோகமே நேர் வாயிலாகும். இறைவன் பாவனைகளுக்கும் அப்பாற்பட்டவன்.

ஆதாரத்தாலே நிராதாரத்தே சென்று
மீதானத்தே செல்க உந்திபற
விமலற் கிடமதன் றுந்திபற. —திரு உந்தியார்.*

ஆகவே, உந்தி என்ற ஆட்டம் பாடுதலேயும், பறத்தலேயும், தனக்கு உறுப்பாகக் கொண்டுள்ளது. உந்தியார் பல்வகைக் கூத்துக்களில் ஒன்று. மகளிர் விளையாட்டுக்களில் ஒன்று.

பூஜைகளில் கிரியைகள் பல செய்யப்படுகின்றன. கிரியை ஆன்மாவின் ஸ்தூல, ஸூக்ஷ்ம உடம்புகளையும், அதன்மூலம் ஆன்மாவையும் பண்படுத்துவது. அகத்திலுள்ள ஆன்ம சக்தியை விளக்குவது ஞானம்.

''கிரியை எனமருவு மவையாவும் ஞானம்
கிடைத்தற்கு நிமித்தம்—''
—உமாபதி சிவாச்சாரியார் [சிவப்பிரகாசம்]

ஞானத்திற்கு நிமித்தம் கிரியைகள். கிரியைகள் பயனற்றச் செயல்கள் அல்ல. இக் கிரியைகள் ஆன்மார்த்தம், பரார்த்தம் என இருவகை. ஆன்மார்த்தம் தனிப்பட்டவர்களின் நன்மைக்காகச் செய்யப்படுவது. பரார்த்தம் உலக நன்மைகளுக்காக செய்யப்படுவது. இக் கிரியைகள் பல. அவற்றை விளக்கும் சிவஞான சித்தியார் பாடல்:

புத்திரமார்க்கம் புகலிற்புதிய விரைபோது
புகைஒளி மஞ்சனம் அமுது
முதற்கொண்டு ஐந்து

* சைவ சாஸ்த்திரத்தில், 'திருஉந்தியார்' ஒரு அநுபூதி நூல். இதை அருளியவர் திருவியலூர் உய்யவந்ததேவ நாயனர். 45 பாடல்கள். உந்தி என்பது ஒரு ஆட்டம். ஆனந்தமேலீட்டால் இந்த ஆட்டம் தோன்றும். உந்தி என்றுல் பறப்பது. 'பாடிப் பற' என்று பெரியாழ்வார் அருளினூர்.

சுத்திசெய்து ஆசனம்மூர்த்தி, மூர்த்திமானும்
சோதியையும் பாவித்து
ஆவாகித்து அர்ச்சித்து பரவிப்
போற்றிப் பரிவினோடும் எரியில்வரு
காரியமும் பண்ணி
நித்தமும் இக்கிரியையினை இயற்றுவோர்கள்
நின்மனத்தன் அருகிருப்பர் நினையுங்காலே.

(1) புதிய மலர்—தூப, தீப நைவேத்யம், (2) சுத்திகள், (3) ஆவாஹனம் (அழைத்தல்), (4) ஆராதனை, (5) அர்ச்சனை, (6) அக்னி காரியம், (7) விஸர்ஜனம் (வழி அனுப்புதல்) என்பன வற்றை இப்பாடல் குறிப்பிடுகின்றது.

பஞ்ச பூஜை : தூபம், தீபம், நறுமலர், நைவேத்யம், திருமஞ் சனம்.

இந்த ஐந்தும் பிருத்வி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்ற பஞ்ச பூதங்களோடு இணைந்தவை.

ஆவரண பூஜை மூர்த்தியின் அருள் வடிவத்தையும், பரிவார தேவதைகளையும் பிரசன்னப்படுத்திப் பூஜிப்பது.

தேவியின் ஸபர்யை என்ற பூஜைக்கு அங்கங்கள்—தேவி சம்பந்தமான மஹாமந்திர ஜபம், 10 விதமான முத்திரைகள், சித்க்நியில் ஹோமம், பிரதக்ஷிணம், நமஸ்காரம், அர்ச்சனை என்ற ஆறு அங்கங்கள்.

இந்த மனதைக் கொண்டு செய்யும் பூஜை அகபூஜை. இதனை திருநாவுக்கரசர்,

காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனம் மணிலிங்கமாக
நேயமே நெய்யும் பாலா நிறைய நீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈசனுர்க்கும் போற்றி அவிக் காட்டினோமே.

என்கிறார்.

சைவ சித்தாந்த நூலாகிய திருக்களிற்றுப்படியாரும் அகப் பூஜையின் மாண்பினை பின்கண்ட வெண்பாவால் உணர்த்து கின்றது.

தம்மிற் சிவலிங்கம் கண்டதனைத் தாம்வணங்கித்
தம்அன்பாம் மஞ்சனநீர் தாமாட்டி—தம்மையொரு
பூவாக்கி பூவழியாமற் கொடுத்து
பூசித்தால் ஓவாமை என்றே உளன்.

நிர்க்குண ப்ரஹ்ம உபாஸனே

நிர்க்குண ப்ரஹ்ம உபாயஸனேயே மானஸீக பூஜை.

சகுணோபாசனத்தில், இரு தத்துவங்களான ஜீவாத்மா, பரமாத்மா இரண்டும் தேவை.

நிர்க்குண உபாசனத்தில் பிரும்மம் அளவிற்கப்பாற்பட்டது என்ற உணர்வு தேவை. ப்ரஹ்மத்தைத் தவிர மற்ற வஸ்துக்கள் ப்ரஹ்மம் அல்ல என்ற உணர்வே முக்கியமாக இருப்பதால் ஆடம்பரமான பூஜைகளுக்கோ, உபாசனங்களுக்கோ இங்கு இடமில்லை. அவசியமுமில்லை. சகுண பூஜையில் நன்கு பழகியவர்களுக்கு மானஸீக பூஜை சுலபமாக வரும்.

நிர்குண மானஸ பூஜாவில் ஆதிசங்கரர் குறிப்பிடுவதாவது:—

மாயையால் அமைக்கப்பட்ட இவ்வுடலில், இருதயம் என்னும் ஆலயத்தில் ஜீவன் என்னும் மணிமயமான லிங்கம் இருக்கிறது.

உலகம் அனைத்தாலும் நமஸ்கரிக்கத் தக்கவன் ஆத்மா. ஆத்மாவால் வணங்கத் தக்கவர் வேறு யாருமில்லை.

ஐக்யானு சந்தானம்

மானஸ பூஜை செய்பவர்கள் விஷயத்தில் அவர்கள் பேசுவதெல்லாம் தேவியின் மந்திரங்கள். அவர்கள் கை, கால்களை அசைப்பது முத்திரைகள். நடப்பது பிரதக்ஷிணம். உண்பது ஹோமம். படுப்பது நமஸ்காரம். சந்தோஷத்திற்கு காரணமான எல்லா செய்கைகளும் புஷ்பாஞ்ஜலி.

இவ்விதம் தன் ஆத்மாவை தேவியினிடம் அர்ப்பணம் செய்வது ஒரு ஐக்யம். தன் பேச்சுக்களே ஜபம் என்று அறிவது 2-வது ஐக்யம். கை, கால்களின் செயல்கள்தான் முத்திரைகள் என்றறிவது 3-வது ஐக்யம். நடப்பது, பிரதக்ஷிணம் ஆகிய இரண்டும் ஒன்றேயென்று உணர்வது 4-வது ஐக்யம். உண்பதையும் ஹோமத்தையும் ஒன்றென அறிவது 5-வது ஐக்யம். படுக்கையும், நமஸ்காரத்தையும் ஒன்ருக அறிவது 6-வது ஐக்யம்.

இவ்விதம் ஆறுவித ஐக்யத்தையும் அநுசந்தானம் செய்து கொண்டு, மானஸீக பூஜை செய்வது மிகவும் சிரேஷ்டம்.

இதை ஆதி சங்கரர் தன் "ஸௌந்தர்ய லஹரி" 27-வது சுலோகத்தில் விளக்கியிருக்கிருர்.

ஜபோ ஜல்ப: சில்பம் ஸகலமபி முத்ராவிரசநா
கதி:ப்ராதக்ஷிண்யக்ரமணம் அசநாத்யாஹுதி விதி:|
ப்ரணாம:ஸம்வேச: ஸுகமகிலம் ஆத்மார்ப்பண த்ருசா
ஸபர்யாபர்யாயஸ்தவ பவது யந்மே விலஸிதம்||

ஸமயாசாரம்

இந்த மானஸிக பூஜைக்கு ஸமயாசாரம் என்ற ஒரு பெயரும் உண்டு.

இந்த சரீரமே ஸ்ரீ சக்ரம். அதில் பிந்து ஸ்தானமாகிய இருதய புண்டரீகத்தில் அம்பிகையின் தியானம் விசேஷ பலத்தைக் கொடுக்கக்கூடியது.

ஸ்ரீ சக்ரத்தின் ஒன்பது திரிகோணமே "நவயோன்யாத்மகம்" எனப்படும். அதாவது ஒன்பது யோநீ ரூபம்.

சக்தி ஸ்வரூபமான ஐந்து முக்கோணத்தை கல்பகவிருக்ஷங்களாகவும், அதன் நடுவிலுள்ள மணித்வீபம், சிந்தாமணி க்ருஹமாகவும், சிவ ஸ்வரூபமான நான்கு முக்கோணத்தை ஸதாசிவ படுக்கை, பீடம் ஆகியவைகளாக தியானித்து, அதில் அம்பிகையை தியானம் செய்யவேண்டும்.

ஸ்ரீ சக்ரம் ஒன்பது ஆவரணங்கள் கொண்டது. இந்த தேகம் ஒன்பது துவாரங்களைக் கொண்டது. ஸ்ரீ சக்ர ரூபமாக இருக்கும் இத்தேகத்திற்கு வாராஹி தகப்பனார். குருகுல்லாதேவி தாயார்.

தர்மம், அர்த்தம் காமம், மோக்ஷம்,	|	இந்த நான்கு சக்திகளுக்கிடையில் தேகமான இத்தீவு இருக்கிறது.
யோநி முதலான முத்திரைகளின் தேதைகள்	|	இத்தீவிற்கு ஆதார சக்திகள்.
ஏழு தாதுக்கள்	—	கற்பக விருக்ஷங்கள்.
சரீரத்திற்கு தேஜஸை உண்டாக்கும் ஜீவன்	|	உத்தியாவனம்.
ஆறு சுவை	—	ஆறு ருதுக்கள்
கிரியாசக்தி	—	பீடம்
ஞானசக்தி (குண்டலினி)	|	கிருஹம்
இச்சாசக்தி	—	மஹாத்ரிபுரஸுந்தரி.
அறிகிறவன்	—	ஹோதா, எஜமானன்.
அறிவு	—	அர்க்கியம்.
அறியப்படுவது	—	ஹவிஸ்

இத் திரிபுடியை போக்கடிப்பதுதான் ஸ்ரீ சக்ர பூஜை.

நவரஸங்கள்	— அணிமா முதலிய ஐச்வர்யங்கள்.
காமம், கோபம், புண்ணியம், பாவம்	ப்ராஹ்மி முதலான எட்டு சக்திகள்.

அந்தர் யாகம்

மானஸிக பூஜைக்கு அந்தர் யாகம் என்ற பெயரும் உண்டு. மானஸீகமாக செய்யும்போது பூஜை, யாகம் என்ற பேதம் போய் விடுகிறது. ஹ்ருதயாகாசத்தில், ரத்னமயமான மண்டபத்தை மனதால் நிர்மாணம் செய்யவேண்டும். த்வாத சாந்தத்திலிருந்து வருகிற அமிர்த தாரையால் அர்க்கிய பாத்திராதிகளை பாவனையாக நிரப்ப வேண்டும்.

துவார பாலகர்கள், கணபதி, குரு வணக்கம் செய்யவேண்டும்.

அம்பிகையை ரத்னபீடத்தில் ஸ்தாபித்து, வைராக்கியம் என்ற சந்தனத்தால் அலங்கரித்து, அஹிம்சை முதலான எட்டு புஷ்பங்களால் ஆராதிக்க வேண்டும். பின்னர் மனம் என்னும் பாத்திரத்தில், பிராணன் என்ற அக்னியில் அஹங்கார தூபம் காட்ட வேண்டும்; சிவஞானத்தையே தீபமாக காட்டவேண்டும். விஷயங்களிலிருந்து திரும்பிய மனதை நைவேத்யமாகக் கொடுக்கவேண்டும்.

ஸுஷும்னா மார்க்கத்தில் பிராணவாயு போய் வருதலையே ஜபமாக, சுமார் பத்து பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து, அவரிடம் அக்னி காரியம் செய்ய அனுமதி பெறவேண்டும்.

மனமென்னும் தாமரை

கபீரே காஸாரே விசதி விஜனே கோரவிபினே
விசாலே சைலே ச ப்ரமதி குஸுமார்த்தம் ஜடமதி:|
ஸமர்ப்யைகம் சேதஸ்ஸரஸிஜ—முமாநாத பவதே
ஸுகேனுவஸ்தாதும் ஜன இஹ ந ஜானுதி கிமஹோ||

—சிவானந்த லஹரி (9) [ஆதிசங்கரர்]

மனதாகிய தாமரை புஷ்பத்தை ஸர்வேச்வரனுடைய சரணாரவிந்தங்களில் நித்தியமான பக்தியுடன் சமர்ப்பிப்பதே மேலான பூஜையாகும். இவ்வாறு மனதாகிய புஷ்பத்தை அர்ப்பணித்து சந்தோஷப்படுத்துவதுபோல, வேறு எந்த புஷ்பத்தைக் கொண்டும் இறைவனை சந்தோஷப்படுத்த முடியாது.

மனதாகிய புஷ்பத்தை சமர்ப்பிக்காமல் ஆயுள் முழுவதும் கோடிக்கணக்கான புஷ்பங்களால் அர்ச்சித்த போதிலும் பலனில்லை.

63 நாயன்மார்களில் (சிவனடியார்களில்) சித்தத்தை சிவன் பால் வைத்தார் என்று ஒருவர் இருந்திருக்கிறார். மனதை நிலை நிறுத்தி குண்டலினி யோகம் பழகியவர்கள் எல்லோருமே சித்தத்தை சிவன்பால் வைத்தவர்கள் தான்.

பகவானுடன் மனதை ஒன்று சேர்ப்பதே ஆத்ம பூஜை. இது பூஜையில் சிறந்தது. அருணகிரிநாதர் இந்த ஆத்ம பூஜையைத் தான் உபதேசிக்கிறார்.

ஆசைகூர் பத்மனேன் மனோபத்ம
மானபூ வைத்து—நடுவே
அன்பான நூலிட்டு நாவிலே சித்ர
மாகவே கட்டி—ஒருஞான
வாசம் வீசிப்ர காசியா நிற்ப
மாசிலோர் புத்தி—அளிபாட
மாத்ருகா புஷ்பமாலை கோலப்ர
வாள பா தத்தி லணிவேனோ

மனமாகிய தாமரைப்பூவை மனோபத்மமானப் பூ என்கிறார். மனமாகிய தாமரை மொட்டு பகவானுடைய நினைவினால் மலர்ந்து பூவாகி அவன் பாதாரவிந்தத்தைச் சேர்ந்துவிடும். நினைவினாலேயே மனத் தாமரையை பகவானிடம் சேர்த்து விடவேண்டும்.

இந்த உலகம் நாம ரூபங்களால் கட்டுப்பட்டது. ஒருவரை கூப்பிட வேண்டுமென்றால் ஏதாவதொரு நாமத்தை (பெயரைச்)ச் சொல்லி அழைக்கிறோம். உடனே அப் பெயருள்ளவன் வந்து நிற்கிறான்.

பேதமாகக் காணப்படும் உலகை அபேதமாகிய நாம சப்தத்தினால் கட்டவேண்டும்.

மூன்று உலகங்களிலும், அதற்கப்பாலுமுள்ள பரம்பொருளை அவனுடைய நாம சப்தத்தினால் குறிப்பிடுகிறோம்.

நாவிலே நாமம் சுழல்வதால் மனம் கட்டுப்படும். இப்படிக் கட்டிய மனதில் வாசனையாய் எங்கும் வியாபித்திருக்கும் பகவானுடைய அருள் ஏற்படுகிறது.

மாத்ருகா புஷ்பம்

நாம சப்தங்களே மாத்ருகா புஷ்பம். அந்த சப்தங்களில் உலகத்திலுள்ள எல்லா தேவதைகளும் அடக்கம்.

கற்பூர ஆரத்தியை இறைவன்முன் காட்டுவதன் அர்த்தம், கற்பூரம் வேறல்ல, இறைவன் வேறல்ல என்பதே. ஜோதியாக உள்ள இறைவனை வணங்கு என்பதே இதன் தத்துவம்.

"பரமனுக்கு பூவும், நீரும் என் மனம்" என்று அர்ப்பணம் செய்கிறார் ஒரு சித்தர்.

கடிமனமே அடிமையாக என்கிறார் அப்பர். ஆண்டவனுக்கு அடிமையாக்கப்பட்ட மனம் ஞான பரிமளம் வீசும் மாத்ருகா புஷ்ப மாக விளங்குகிறது. சித்தர்களும் பக்தர்களும் ஞானிகளும், ஆத்ம பூஜையை இவ்வாறு விளக்கியிருக்கிறார்கள்.

"துள்ளு மறியாம் மனதை பலி கொடுத்தேன்" என்கிறார் தாயுமானவர். அடக்கமில்லாமல் அகங்காரத்துடன் துள்ளும் மனதை, ஆண்டவனுக்குப் பலி கொடுத்தால் பிராரப்தம் போய் விடும். மனம் எப்போதும் இறைவனிடம் ஈடுபட்டிருப்பதே சதா கால பூஜை. உலகத்தை மறந்து இறைவனோடு ஒன்றுபடுவதே ஆத்ம பூஜை.

இந்த ஆத்ம பூஜைக்கு மடி (சுத்தம்) வேண்டாம். குளிக்க வேண்டாம். பூஜைக்குரிய சாதனங்கள் எதுவும் வேண்டாம். எப்போதும் எங்கும் செய்யலாம். இவ்வாறு ஆத்ம பூஜை செய்பவர் களுக்கு சமத்துவம் தானாகவே வந்துவிடும். உலகத்தை லக்ஷியம் செய்யவேண்டாம்.

வெட்டாத சக்கரம் (இத்தேகம்), பேசாத மந்திரம் (ஓம்), வேறெவர்க்கும் எட்டாத புஷ்பம் (இதய புண்டரீகம்), இறையாத தீர்த்தம் (ஆனந்தக் கண்ணீர்), இனி முடிந்து கட்டாத லிங்கம் (சங்கல்ப, விகல்பமற்ற மனம்) முட்டாத பூஜை (சதா கால பூஜை). இதில் மனதாகிய தாமரை முக்கிய இடம் பெறுகிறது.

அம்பிகைக்கு லலிதா ஸஹஸ்ர நாமத்தில் "ரஹோயாகக் க்ரமா ராத்யா, ரஹஸ்தர்ப்பண தர்ப்பிதா" என்று இரு நாமாக்கள் உண்டு.

இந்த இரண்டும் மானஸிக பூஜையைக் குறிப்பிடுவன.

ரஹோயாகம் என்பதற்கு, தனிமையில், ஏகாந்தமாக (ரகசிய மாக) செய்யப்படும் யாகம் என்று அர்த்தம். கனக குண்டலினி அதிஷ்டானமாக இருக்கும் சிதக்னியில் புண்யம் முதலிய அஷ்ட யோகங்களால் செய்யப்படும் யாகமே ரஹோயாகம். இந்தப் பிரயோகத்தால் ஆராதிக்கப்படுபவள் அம்பிகை.

ரகசியமாக செய்யப்படும் தர்ப்பணத்தால் சந்தோஷிப்பவள் என்று மற்றொரு நாமாவிற்கு அர்த்தம். திருப்தியைக் கொடுக்கும் கர்மாவுக்கு தர்ப்பணம் என்று பெயர்.

ரஹோயாகம், ரகஸ்தர்ப்பணம் பின்வருமாறு வர்ணிக்கப்படுகின்றன.

உள்ளுக்குள்ளே இடைவிடாமலும், விறகில்லாமலே வளர்ச்சியுடன் எரிந்துக் கொண்டிருப்பதும், மோகமாகிற அந்தகாரத்திற்கு சத்ருவாயும், அற்புதமாக ஜ்வலிப்புடன் ஞானக்னியில் பிருத்வி முதல் சிவன் வரையிலுள்ள தத்துவங்களடங்கிய விச்வத்தை ஆஹுதி செய்கிறேன்.

அந்தர் நிரந்தர நிரிந்தன மேதமானே
மோகாந்தகார பரிபந்தினி ஸம்விதக்னௌ
கஸ்மிம் சித் அத்புத மரீசி விகாஸ பூமௌ
வசுதாதி ஜுஹோமி வசுதாதி சிவாவஸாநம்||

ப்ரகாச, விமர்சங்களாகிற கைகளிலிருக்கும் உன்மணியாகிற ஸ்ருக்கினால், தர்மம், அதர்மம், புண்ணியம் பாபம், கிருத்யம், அகிருத்யம், சங்கல்பம், விகல்பம் இவைகளாகிற நெய்யை பூர்ணாக்னியில் ஆஹுதி செய்கிறேன்.

ப்ரகாசமர்ச ஹஸ்தாப்யாம்
அவலம்ப்யோந்மணீ ஸ்ருசம்
தர்மாதர்ம கலா ஸ்நேஹம்
பூர்ணவந்ஹௌ ஜுஹோம் யஹம்||

மானஸிக ஹோமம்

நம் சரீரத்தில், நாபியில் மூன்று மேகலையோடு கூடிய விருத்த குண்டத்தில் அக்னியைத் தியானிக்க வேண்டும். அதை நிருதி திக்கில் தியாஜ்யம் செய்து சிவாக்னியின் ஸ்வரூபம் ஆனதாகப் பாவித்து, ஹிருதயத்தில் பாவனையாக எடுத்துச் சென்று, அங்குள்ள ஞானக்னியுடன் இணைத்து பின் த்வாதசாந்தம் கொண்டுபோய் அங்குள்ள பரமசிவனிடம் சேர்பித்து அந்த ஞானரூபமான அக்னியை மீண்டும் நாபிக்கு கொண்டுவந்து வைத்து தியானித்து, ஸுஷும்னா என்ற கரண்டியால், த்வாதசாந்த அம்ருதம் என்ற நெய்யைக் கொண்டு மூலமந்திரத்தால் 1008 அல்லது 108, அல்லது 28, அல்லது 8 தடவை ஹோமம் செய்து பின் பூர்ணாஹுதி செய்து நாபி கமலத்தில் தியானிக்கப்பட்ட அம்பிகையை இருதயத்தில் சேர்ப்பிக்க வேண்டும்.

பின் புருவ மத்தியில் சகல அவயவ சம்பூர்ண சுத்த ஜோதி வடிவாக அம்பிகையை தியானித்து மனஸ் சமாதியிலிருக்க வேண்டும். சுருக்கமாகச் சொன்னால் நாபியில் ஞானக் கனலை எழுப்பி, அமிர்தமாகிய நெய்யை இடை, பிங்கலை என்ற சுருவங்களால்

ஹோமம் செய்யவேண்டும். புருவ நடுவில், மூலமந்திரத்தைச் சொல்லி தியானம் செய்யவேண்டும். இது தான் அந்தர்யாகம். இது ஆத்ம சுத்தியின் பின்பகுதி. இவை செய்த பின் தான் பாஹ்ய (வெளிப்படையான) பூஜை செய்ய சாஸ்திரம் இடம் கொடுக்கிறது!

மானஸிக யாகத்தில் பஞ்ச பிராணங்களே அக்னி.

ப்ராணன்	—	கார்ஹபத்யம்
அபானன்	—	ஆஹவனீயம்
வியானன்	—	தக்ஷிணாக்னி
ஸமானன்	—	ஆவத்ஸத்யம்
உதானன்	—	ஸப்யாக்னி

ஹோம திரவியங்கள் எல்லாவற்றையும் மனதால் கற்பித்துக் கொண்டு, மனதால் ஹோமம் செய்வதாக நினைக்க வேண்டும்.

யக்ஞத்திற்கு அதிதேவதை பரப்பிரும்மம். பயனை அளிப்பது நிர்க்குணமான சக்தி. அவள் எங்கும் வியாபித்திருக்கும் பிரும்ம வித்யை. அவளை நாடியே பிராணாக்னி ஹோமம் செய்யவேண்டும்.

பிறகு, மனதை யாதொரு பிடிப்புமில்லாமல் செய்து பிராணனை சாஸ்வத பிரும்ம ஸ்வரூபமாக குண்டலினி சக்தியில் ஹோமம் செய்யவேண்டும்.

ஸ்வானுபாவத்தினால் ஸ்வரூபிணியாக இருக்கும் மஹேச்வரியை சமாதியினால் தியானம் செய்ய வேண்டும். சகல பூதங்களும் தன்னிடம் இருப்பதாகவும், தான் எல்லா ஜீவன்களிடமும் இருப்பதாகவும், கருதவேண்டும். அப்போது மாயை முதலிய சகல துன்பங்களும் பஸ்மமாகும். ப்ராரப்த கர்மா மட்டும் உடல் உள்ளவரை இருக்கும்.

ஞான யக்ஞம்

மானஸம் வை ப்ராஜாபத்யம் பவித்ரம் மானஸேன
மனஸா ஸாது பச்யதி மானஸாருஷயகும் ப்ரஜா|
அஸ்ருஜந்த மானஸே ஸர்வம் ப்ரதிஷ்டிதம்
தஸ்மான் மானஸம் பரமம் வதந்தி||

—மஹா நாராயணோபநிஷத்.

மானஸ பூஜை பிரஜாபதியிடமிருந்து தோன்றியது. தூய்மையளிப்பது. மானஸ பூஜையால் நன்மையைக் காணலாம். ரிஷிகள் மானஸ பூஜை சிறந்ததென்கின்றனர்.

ஓம்காரத்தை ஜபித்துக் கொண்டு, ஆத்மாவை தியானிக்க வேண்டும். இதுதான் தேவ ரஹஸ்யம். இப்படித் தியானிப்பவன் பிரும்மத்தின் மஹிமையை அறிகிறுன்.

இந்த ஞான யக்ஞத்திற்கு—


ஆத்மா—எஜமானன்; சிரத்தை—பத்னி; சரீரம்—சமித்து; மார்பு—யாகமேடை; ரோமம்—தர்ப்பை; சிகை—வேதம்; இருதயம்—யூபஸ்தம்பம்; காமம்—நெய்; கோபம்—பலி; தவம்—வேள்வித்தீ; புலனடக்கம்—சமையல்காரன்; தானம்—தக்ஷிணை; வாக்கு—ஹோதா; பிராணன்—உத்காதா; கண்—அத்வர்யு; மனம்—பிரும்மா; காது—அக்னீத்; உயிர் உள்ள காலம்—தீக்ஷாகாலம்; சாப்பிடுவது—ஹவிஸ்; குடிப்பது—ஸோமபானம்; மகிழ்ச்சி எதுவோ அது—உபஸத்; நடப்பது, உட்காருவது, நிற்பது—பிரவர்க்கியம்; வாய்—ஆஹவனீயாக்னி; பேசுவது—ஆஹுதி; விஞ்ஞானம்—ஹோமம்; காலை, மாலையில் உண்பது—சமித்து; பக்ஷங்கள், மாதங்கள்—சாதுர் மாஸ்ய யாகங்கள்; ருதுக்கள்—பசு பந்த யாகம்; ஸம்வத்ஸரம், பரிவத்ஸரம்—அஹர்கண யாகங்கள்; மரணம் - பூர்த்தி.

ஸ்வாஹா—என்ற சொல்லுக்கு சாயணுசாரியார் விளக்கம் தருகையில், "நான் செய்யும் ஹோமம் நன்ருக குறையற்றதாகச் செய்து தேவதைகள் திருப்திபடும்படி ஆகட்டும்" என்கிருர். ஸ்வாஹா என்பது பெண்பால் மந்திரம். ஸ்வாஹா தேவியே அக்னியின் மனைவி. இவள் சரித்திரம் தேவி பாகவதத்திலுள்ளது.

ஸ்வதா என்ருல் நாம் கொடுக்கும் ஒவ்வொரு பொருளையும் பித்ருக்கள் பேரன்புடன் ஏற்றுக் கொள்கிருர்கள் என்று அர்த்தம்.

அக்னி ஹோத்ரம் முதல் அஸ்வமேதம் வரை செய்யப்படும் யாகங்களில் முக்கியமான மந்திரம் 'வௌஷட்' இதன் அர்த்தம், தேவதைகளுக்குப் பிரியமான பொருள்களைக் கொடுத்து வேள்வியைச் செய்வது.

பிரும்மா, சப்தசதியில் தேவியைக் குறித்துச் செய்த ஸ்தோத்திரத்தில் ஸ்வாஹா, ஸ்வதா, வௌஷட் என்ற மூன்று மந்திரச் சொற்களையும் உபயோகித்திருக்கிருர்.



மானஸீக வழிபாட்டுக்கு மஹான்கள் காட்டிய வழி 2

ச்ரேயாந் த்ரவ்யமயாத் யக்ஞாத்
ஞானயக்ஞ: பரந்தப
ஸர்வம் கர்மாகிலம் பார்த்த
ஞானே பரிஸமாப்யதே —கீதை [4—33]

பரமாத்மா எல்லாவித பூஜைகளைக் காட்டிலும், இந்த மானஸீக வழிபாட்டையே விரும்புகிறார்.

திரவியத்தைக் கொண்டு யக்ஞமாகச் செய்யப்படும் கர்மத்தின் ஒரு பகுதியைவிட ஞான ரூபமான யக்ஞமே சிறந்தது. கர்மங்கள் யாவும், யக்ஞத்தில் முடிவடைகின்றன.

யக்ஞம், கர்மத்தில் பிறக்கிறது. திரவிய யக்ஞம், ஞான யக்ஞம் என யக்ஞம் இருவகை. இரண்டில் ஞான யக்ஞமே சிறந்தது என்கிறார் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா மேற்சொன்ன சுலோகத்தில்.

பூசலார் கட்டிய கோயில்

புற வழிபாட்டின் பயன் அக வழிபாட்டால் விளையும். வழிபாட்டுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை யென்றால் மனம் இருக்கிறதல்லவா? அதைக்கொண்டு வழிபட வேண்டும். அப்படி வழிபட்டவர் பூசலார் நாயனார்.

போதும் பெறாவிடில் பச்சிலையுண்டு
புனலுண் டெங்கும்
ஏதும் பெறாவிடில் நெஞ்சுண்டு
இன்றே இணையாகச் செய்யும்
சூதும் பெறுமலை பங்கர்தென்
தோணிபுரேசர் வண்டின்
தாதும் பெறாத அடித்தாமரை
சென்று சார்வதற்கே.

பூசலார் மானஸீகமாக ஒரு கோயில் கட்டினார். பல்லவ மன்னனும் ஏராளமான பொருட் செலவில் காஞ்சி கைலாசநாதர் கோயிலை கட்டினான். இரண்டுக்கும் கும்பாபிஷேகம் ஒரே தினத்தில். இறைவன் பூசலார் கட்டிய ஞானக் கோயிலையே விரும்பினார். மன்னனின் கனவில் இறைவன் தோன்றி, தன் பக்தன் பூசலார் திருநின்றவூரில் [தின்னனூர்—சென்னைக்கு அருகில் உள்ளது] கட்டிய ஆலயத்திற்கு தான் போகவேண்டி யிருப்பதால், "உன் கோயில் கும்பாபிஷேகத்தை நாளைக்கு ஒத்திப்போடு" என்றார்.

அரசன் திருநின்றவூர் சென்று பார்த்தான். அங்கு கோயில் எதுவும் கட்டப்பட்டிருக்கவில்லை.

மனதினால், பூசலார் ஆலயம் கட்டியதை சேக்கிழார் விளக்குகிறார்.

அடிமுதல் உபானமாதி ஆகிய படைகள் எல்லாம்
வடிவுறுந் தொழில்கள் முற்றும் மனத்தினால் வகுத்துமான
முடிவுறு சிகரந்தானு முன்னிய முழத்திற் கொண்டு
திரம்பிட நினைவால் நினைத்தார்.

அரசன் காடவர்கோன், "ஐயா! நீர் கட்டிய கோவில் எங்கே? இறைவன் என் கனவில் வந்து உங்கள் ஆலய கும்பாபிஷேகத்துக்கு வருவதாகச் சொன்னாரே!" என்பதை,

மன்னவன் உரைப்ப கேட்ட அன்பர்தாம் வெருண்டு நோக்கி
என்னையோர் பொருளாக் கொண்டே எம்பிரான் அருள் [செய்தாரேல்
முன்வரு நிதியிலாமை மனத்தினால் முயன்றகோயில்
இன்னதாம் என்று சிந்தித் தெடுத்தவா றெடுத்துச் சொன்னார்.

பூசலாரையே நேரில் சந்தித்து, அவர் கட்டியது மானஸீகக் கோயில் என்பதை அறிந்து வியந்தான்,

அரசன் செய்தது திரவிய யக்ஞம்.

பூசலார் செய்தது ஞான யக்ஞம்.

இறைவனின் உருவத்தை மனதில் தியானிக்கும் பொழுது, அவனுடைய இறைத்தன்மை, ஸௌலப்ய கல்யாண குணங்கள் நம் மனதில் பதிய வேண்டும்.

"குழல் இனிது யாழ் இனிது" என்கிறோம். வெறும் புல்லாங் குழலும், யாழுமா இனிது? அவைகளிலிருந்து வெளிப்படும் ஒலி அல்லவா இனிது. எப்படிக் குழலையும் அதன் இசையையும் பிரிக்க முடியாதோ, அதேபோல இறை உருவத்தையும் இறைத் தன்மை

யையும் பிரிக்க முடியாது. இறையுணர்வு என்ற மனத்தைப் பரப்பும் மலராக இறை உரு இருக்கிறது.

பட்டினத்தார் தூய்மைப் படுத்திய மாட்டுக் கொட்டில்

பட்டினத்தார், இறைவன் இருக்கவேண்டிய இருதயம், ஆணவம் கன்மம் மாயை என்ற குப்பைக் கூளங்கள் குவிந்து, மாட்டுக் கொட்டிலாக இருப்பதைக் காண்கிறார். காமம், குரோதம் முதலிய குப்பைகளை அகற்றி சுத்தப்படுத்தினார். அன்பு கொண்டு மெழுகி, அருள் விளக்கு ஏற்றுகிறார். பின், இறைவனை அங்கு எழுந்தருளும்படி பிரார்த்திக்கிறார்.

ஊற்றை சரீரத்தை ஆபாசக்கொட்டிலை ஊன்பொதிந்த
பீற்றற் றுருத்தியை சோறிடும் தோற்பையை பேசரிய
காற்றிற் பொதிந்த நிலையற்ற பாண்டத்தை காதல்செய்தே
ஏற்று திரிந்து விட்டேன் இறைவா! கச்சியேகம்பனே!

விழுப்பொருளறியா அழுக்குறு மனமும்
ஆணவ மலத்துதித் தனைந்திடில் உளைந்திடும்
நிணவை புழுவென நெளிந்திடு சிந்தையும்
படிறும் பாவமும் பழப்புறு நினைப்பும்
தவறும் அழுக்காறும் இவறு பொச்சாப்பும்
கவடும் பொய்யும் சுவடும் பெருஞ்சின
இகலும் கொலையும் இழிப்புறு புன்மையும்
பகையும் அச்சமும் துணிவும் பனிப்பும்
முக்குண மடமையும் மைப்பொறி முயக்கமும்
இடும்பையும் பிணியும் இடுக்கிய ஆக்கையை
நடுவன் வந்தழைத்திட நடுங்கிடும் யாக்கையை
பிணமெனப் படுத்தி யான் புறப்படும்பொழுது நின்
அடிமலர் கமலத்து அபயநின் அடைக்கலம்.

நெஞ்சக் கோவில் பற்றி திருமூலர்

இறைவன் கடலிலும் மலையிலும், ஐம்பூதங்களிலும், ரிஷப வாகனத்தின் மீதும் இருப்பவன். இவன் மனித நெஞ்சத்தில் இடம் தேடுகிறான். அவன் வருவதற்கு தடை எதுவும் செய்யாமல் இருப்பதே நாம் செய்யவேண்டியது என்கிறார் திருமூலர்.

கடலுடையான் மலையானத்து பூதத்
துடலுடையான் பலஊழி தோறுந்
அடல்விடையேறும் அமரர்கள் நாதன்
இடமுடையார் நெஞ்சத்தில் இருந்தானே.

இதைத்தான், "உள்ளுவார் உள்ளத்து உளன் காண்பாய்" என்கிறார் பொய்கையாழ்வார்.

சித்தர்களுடைய யோக நெறிப்படி இச் சரீரத்தையே கோவிலாக்கி, அதனுள் பூஜைக்குரிய ஸ்தானங்களும் சொல்லப்படுகின்றன.

குருமுகமாகத் தெரிந்துகொண்டு செய்யவேண்டிய அந்த ஆன்ம பூஜா ரகசியத்தை திருமூலர் குறிப்பிடுகிறார்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானுக்கு வாய்கோபுர வாசல்
தெள்ளந் தெளிந்தோர்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே.

ஆன்மாவே பூஜைக்குரிய சிவலிங்கம். பஞ்சேந்திரியங்களே ஏற்றி வைத்துள்ள ஐந்து மணி விளக்குகள். ஞானம் பெறுதவர்களுக்கு அவைகள் கள்ளப் புலன்கள்.

ஆதிசங்கரர் அமைத்த கூடாரம்

இறைவன் தங்கியிருக்க ஆதிசங்கரர் ஒரு கூடாரம் அமைத்துக் கொடுக்கிறார்.

த்ருதி எனப்பட்ட உறுதியைத் தூணாக நிறுத்தி, அசைக்க முடியாத ஸத்வகுணம் என்னும் கயிற்றால் கட்டி, தூய வெண்மையான துணியால் மூடப்பட்டது இந்தக் கூடாரம்.

"த்ருதி ஸ்தம்பா தாராம் த்ருடகுண நிபத்தாம்....ஸ்புட படகுடீம்."

ஏலக்காய், வெட்டிவேர், வாஸனை புஷ்பங்கள் இவைகளுடன் கூடிய, கங்காதி தீர்த்தங்கள், மாணிக்கம் முதலியவைகள் கலந்த சுவர்ண ஜலத்தால், வைதிக தாந்த்ரீக மந்திரங்களைக் கூறி ஸ்நானம் செய்விக்கிறேன்,

15. வஸ்த்ரம்

பாலார்க த்யுதி தாடிமீய குஸுமப்ரஸ்பர்த்தி ஸர்வோத்தமம்
மாதஸ்த்வம் பரிதேஹி திவ்யவஸனம் பக்த்யாமயா கல்பிதம்|
முக்தாபிர்க்ரதிதம் ஸுகஞ்சுகமிதம் ஸ்வீக்ருத்ய பீதப்ரபம்
தப்த ஸ்வர்ணஸமானவர்ண மதுலம் ப்ராவர்ண மங்கீ குரு||

பாலசூரியனின் காந்தி, மாதுளம்பூ போன்ற சிவந்த பட்டாடைகளை உமக்கு அளிக்கின்றேன். ரத்துக்கள் சேர்க்கப்பட்ட தங்க நிறமுள்ள ரவிக்கையையும், உருக்கிய தங்கம் போன்ற மேலாடையையும் உமக்கு அளிக்கிறேன். ஏற்று அணிந்து கொள்வீர்களாக.

16. பாதுகை

நவரத்னமயே மயார்பிதே கமநீய தபநீய பாதுகே|
ஸவிலாஸமிதம் பதத்வயம் க்ருபயாதேவி தயோர் விதீயதாம்:||

நவரத்னமயமான அழகான பாதுகைகளை உமக்குத் தருகிறேன். அதில் உமது இருபாதங்களையும் அருள்கூர்ந்து வைத்து, அணிந்து கொள்ளுங்கள்.

17. கூந்தல் ஒப்பனை

பஹுபி ரகரு தூபை: ஸாதரம் தூபயித்வா
பகவதி தவ கேசான் கங்கதைர் மார்ஜயித்வா|
ஸுரபி ரரவிந்தை: சம்பைகஃ சார்ச்சயித்வா
ஜடிதி கனக ஸூத்ரை: ஜூடயன் வேஷ்டயாமி||

அகிற் புகையால் தூபங்காட்டி, கூந்தலை வாரி முடித்து, தாமரை, சம்பக மலர்களால் அர்ச்சித்து, ஸ்வர்ண சூத்திரத்தால் பின்னிக் கட்டுகிறேன்.

18. மையிடல்

ஸௌவீராஞ்ஜன மிதமம்ப சக்ஷுஷோஸ்தே
விந்யஸ்தம் கனக ஶலாகயா மயாயத்|
தந்நூனம் மலினமபி த்வதக்ஷி ஸங்காத்
ப்ரும்மேந்த்ராத்ய பிலஷணீய தாமியாய||

அம்மா! இந்த ஸௌவீராஞ்ஜன மையை ஸ்வர்ணக் குச்சியால், உமது கண்களுக்கு தீட்டியது கருப்பானாலும், உமது கண்களின் சேர்க்கையால் ப்ரும்மாதி தேவர்களால் விரும்பப்படுவதாகவே இருக்கிறது.

19. ஆபரணம்

மஞ்ஜீரே பதயோர் நிதாய ருசிராம்வின்யஸ்ய காஞ்சீம் கடௌ
முக்தாஹார முரோஜயோ ரநுபமாம் நக்ஷத்ர மாலாம் கலே|
கேயூராணி புஜேஷு ரத்னவலயஶ்ரேணீம் கரேஷுக்ரமாத்
தாடங்கே தவகர்ணயோர்வினிததே ஶீர்ஷேச சூடாமணிம்||

திருவடிகளில் பாதரசமும், இடுப்பில் ஒட்டியாணத்தையும், மார்பினில் முத்தாரமும், கழுத்துக்கு அட்டிகையும், தோள்களில் வாகுவலயங்களும், கைகளில் ரத்ன வளையல்களும், காதுகளில் அழகிய தோடுகளையும், தலையில் சூடாமணியையும் அணிவிக்கிறேன்.

20. அலங்காரம்

தம்மில்லேதவ தேவி ஹேமகுஸுமான் யாதாய பாலஸ்தலே
முக்தாராஜி விராஜமான திலகம் நாஸாபுடே மௌக்திகம்|
மாதர்மௌக்திக ஜாலிகாஞ்ச குசயோ: ஸர்வாங்குலீஷூர்மிகா:
கட்யாம் காஞ்சன கிங்கிணீர் வினிததே ரத்னாவதம் ஸம்ஶ்ருதௌ||

சொருக்கினில் மலர்கள் சூட்டி, நெற்றியில் திலகமிட்டு, மூக்கினில் புல்லாக்கு பொருத்தி, முலைகளுக்கு முத்து ஜாலங்களையும், விரல்களுக்கு மோதிரங்களையும் அணிவிக்கிறேன்.

21. திலக பூஜை

மாத:பாலதலே தவாதிவிமலே காஶ்மீர கஸ்தூரிகா
கர்பூராகருபி: கரோமி திலகம் தேஹேங்கராகம் தத:|
வக்ஷோஜாதிஷு யக்ஷகர் தமரஸம் ஸிக்த்வாச புஷ்பத்ரவம்
பாதௌ சந்தன லேபநாதிபிரஹம் ஸம்பூஜயாமி க்ரமாத்||

நெற்றியில் குங்குமப்பூ, கஸ்தூரி, கற்பூரம், அகரு இவை களால் திலகமிடுகிறேன். ஸ்தனங்களுக்கு சந்தனக் குழம்பையும், பாதங்களுக்கு சந்தனத்தையும் பூசி பூஜிக்கிறேன்.

22. அக்ஷதார்ச்சனை

ரத்னாக்ஷதைஸ்த்வாம் பரிபூஜயாமி
முக்தாபலைர் வாருசிரை ரவித்தை:|
அகண்டிதைர் தேவியவாதிபிர்வா
கஸ்மீர பாங்காங்கித தண்டுலைர்வா||

ரத்னமயமான அக்ஷதைகளாலும், துவாரம் இல்லாத முத்துக் களாலும், முனை முறியாத குங்குமப்பூ கலந்த அரிசியாலும் உம்மை பூஜிக்கிறேன்.

23. சந்தனம்

ஜனனி சம்பக தைல மிதம் புரோ
ம்ருகமதோபயுதம் படவாஸகம்:|
ஸௌரபி கந்த மிதஞ்ச சதுஸ்ஸமம்
ஸபதி ஸர்வமிதம் பரிக்ருஹ்யதாம்||

சம்பகதைலம், கஸ்தூரி வாசனைப்பொடி, வாஸனை கந்தம் முதலிய சந்தனாத உபசாரங்களை ஏற்றுக் கொள்வாயாக.

24. ஸிந்தூரம்

ஸீமந்தேதே பகவதி மாயாஸாதரம் ந்யஸ்தமேதத்
ஸிந்தூரம் மே ஹ்ருதய கமலே ஹர்ஷ வர்ஷம் தநோதி|
பாலாதித்ய த்யுதிரிவ ஸதா லோஹிதா யஸ்யகாந்தி
ரந்தர்த்வாந்தம் ஹரதி ஸகலம் சேதஸா சிந்தயைவ||

உமது வகுட்டில் நான் இட்ட ஸிந்தூரம் காணப்படுவது எனக்கு அளவில்லாத சந்தோஷத்தைக் கொடுக்கிறது. பாலசூரி யனைப்போல, என் மனத்திருளையும் போக்குகிறது.

25. புஷ்பம்

மந்தார குந்த கரவீர லவங்க புஷ்பை:
த்வாம் தேவி ஸந்ததமஹம் பரிபூஜயாமி|
ஜாதி ஜபா வகுள சம்பக கேதகாதி
நாதவிதாதி குஸுமானி க தேநர்பயாமி||

மந்தாரம், குருக்கத்தி, லவங்கம், அரளி புஷ்பங்களால் உன் னைப் பூஜிக்கிறேன். ஜாதிப்பூ, செவ்வரத்தை, மகிழம்பூ, சம்பகப்பூ, தாழம்பூ முதலிய புஷ்பங்களை உமக்கு அர்ப்பணிக்கிறேன்.

26. புஷ்பார்ச்சனை

மாலதீ வகுள ஹேம புஷ்பிகா காஞ்சநார கரவீர கேதகை:
கர்ணிகார கிரிகர்ணி காதிபி: பூஜயாமி ஜகதம்ப தே வபு:
பாரிஜாத ஶதபத்ர பாடலை: மல்லிகா வகுள சம்பகாதிபி
அம்புஜை: ஸுகுஸுமைஶ்ச ஸாதரம் பூஜயாமி ஜகதம்ப வபு:

அம்பா! ஜாதிப்பூ, மகிழம்பூ, மந்தாரை, கொன்றை முதலிய புஷ்பங்களால் உமது உடலை பூஜிக்கிறேன்.

பாரிஜாதம், தாமரை, பாடலம், மல்லி, சம்பகம் ஆகிய சிறந்த புஷ்பங்களால் உம்மைப் பூஜிக்கிறேன்.

27. தூபம்

லாக்ஷாஸம்மிளிதை: ஸிதாப்ரஸஹிதை: ஶ்ரீவாஸஸம் மிஶ்ரிதை:
கர்பூராகலிதை: ஶிரை: மதுயுதை: கோஷர்பிஷா லோடிதை:
ஶ்ரீகண்டா கரு குக்குலுப்ரபிருதிபி: நானாவிதைர் வஸ்துபி:
தூபம் தே பரிகல்பயாமி ஜனனி ஸ்நேஹாத் த்வமங்கி:|

சந்தனம், கற்பூரம், அகரு, தேன், பசுநெய் ஆகியவைகளுடன் குக்குலு முதலிய வாசனைப் பொருட்களைச் சேர்த்து தூபம் காட்டுகிறேன்.

28. நீராஜனம்

ரத்னாலங்கிருத ஹேமபாத்ர நிஹிதை : கோஸர்பிஷா லோடிகை :
தீபை: தீர்க்கதராந்தகார பிதுரை : பாலார்க்க கோடிப்ரபை : |
ஆதாம்ர ஜ்வலதுஜ்வல ப்ரவிலஸந் ரத்ன ப்ரதீபைஸ்ததா
மாதஸ்த்வா மஹ மாதராத நுதினம் நீராஜயாம் யுச்சகை : ||

தங்கப் பாத்திரத்தில், பசும் நெய்யால் நனைக்கப்பட்ட திரிகளையுடைய தீபங்களால் தினமும் உமக்கு நீராஜனம் செய்கிறேன்.

29. நைவேத்யம்

மாதஸ்த்வாம் ததிதுக்தபாயஸ மஹாஶால்யன்ன ஸந்தானிகா :
ஸூபாபூப ஸிதாக்ருதை : ஸவடகை : ஸக்ஷௌத்ர ரம்பாபலை
ஏலா ஜீரக ஹிங்கு நாகரநிஶாகுஸ்தும்பரீ ஸம்ஸ்க்ருதை :
ஶாகைஸ்ஸாகமஹம் ஸுதாதி கரஸை : ஸந்தர்ப்பயாம் யர்சனை : ||

தயிர், பால், பாயஸம், சால்யன்னம் முதலியவைகளையும், பருப்பு, வடை, அதிரஸம், தேன் கலந்த பழங்களையும், ஏலக்காய், ஜீரகம் முதலியவைகளால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகளையும், உம்மை அர்ச்சித்து நைவேத்யமாகக் கொடுக்கிறேன்.

30. பக்ஷணங்கள்

ஸாபூப ஸூபதநிதுக்த ஸிதாக்ருதானி
ஸுஸ்வாது பக்த பரமான்ன புரஸ்ஸராணி |
ஸாகோல்லஸன் மரிசி ஜீரக பால்ஹிகானி
பக்ஷ்யாணி புங்க்ஷ்வ ஜகதம்ப மயார்பிதானி ||

வடை, பருப்பு, தயிர், சர்க்கரை, நெய் முதலானவைகளையும், கறிகாய்களையும், மிளகு, ஜீரகம், குங்குமப்பூவால் செய்யப்பட்ட ருசிமிக்க பக்ஷணங்களையும் சமர்ப்பிக்கிறேன். சாப்பிடுங்கள்.

31. தீர்த்தம்

க்ஷீர மேத திதமுத்த மோத்தமம்
ப்ராஜ்ய மாஜ்ய மிதமுஜ்வலம் மது |
மாதரே தத ம்ருதோப மம்பய :
ஸம்ப்ரமேண பரிபிய தாம்முஹு : ||

பால், ருசியுள்ள தேன், அமிர்தம் ஆகிய இத்தீர்த்தங்களை அன்புடன் அருந்துவாயாக.

32. கை அலம்புதல், சந்தனம் அளித்தல்

உஷ்ணோதகை : பாணியுகம் முகஞ்ச
ப்ரக்ஷால்ய மாத : கல தௌத பாத்ரே |
கர்பூர மிஸ்ரேண ஸகுங்குமேன
ஹஸ்தௌ ஸமுத்வர்த் தய சந்தனேன ||

இதோ ! ஸ்வர்ண பாத்திரத்தில் கைகளையும், முகத்தையும் சுத்தம் செய்து கொள்ளுங்கள். குங்குமப்பூ கலந்த சந்தனத்தை கைகளில் பூசிக் கொள்ளுங்கள்.

33. தீர்த்தம்

அதிஸீத முஸீரவாஸிதம் தபநீய கலஸே நிவேஸிதம் |
படபூதமிதம் ஜிதாமிருதம் ஸுசிகங்கா ஜலமம்பபியதாம் ||

சுத்தமான, வடிகட்டிய, வாஸனை பொருந்திய, தங்கப் பாத்திரத்திலுள்ள கங்கை நீரை அருந்துங்கள்.

34. கனி வகைகள்

ஜம்ப்வாம்ர ரம்பா பலஸம்யுதானி
த்ராக்ஷா பழ க்ஷௌத்ர ஸமன்விதானி |
ஸநாரி கேளானி ஸதாடி மானி
பலானி தே தேவி ஸமர்ப்பயாமி ||

நாவல், மா, வாழை, த்ராக்ஷை, மாதுளம் பழம் முதலிய கனி வகைகளை, உங்களுக்குப் பிரியமுடன் கொடுக்கிறேன்.

கூஷ்மாண்ட கோஸாதி கஸம்யுதாநி
ஜம்பீர நாரங்க ஸமன்விதாநி |
ஸபீஜபூராணி ஸபாதராணி
பலாநிதே தேவி ஸமர்ப்பயாமி ||

விளாம்பழம், எலுமிச்சை, சாரங்கம், இலந்தம்பழம் ஆகியவை களையும் உங்களுக்கு அன்புடன் அளிக்கிறேன்.

35. தாம்பூலம்

கர்பூரேணயுதைர் லவங்க ஸஹிதை : தக்கோல சூர்ணைர் விதை :
ஸுஸ்வாதுப்ர முகை : ஸகௌரரதிரை : சுஸ்நிக்த ஜாதீபலை : |
மாத : கைதகபத்ர பாண்டுருசிபி : தாம்பூல வல்லீதலை
ஸாநந்தம் முகமண்ட நார்த்த மதுலம் தாம்பூல மங்கீ குரு ||

பச்சைக் கற்பூரம், லவங்கம், தக்கோலம் சேர்க்கப்பட்ட வெளுப்பான வெற்றிலை, பாக்கை ஆனந்தத்துடன் கொடுக்கிறேன்,

36. கற்பூரவீடிகள்

ஏலா லவங்காதி ஸமன்விதானி
தக்கோல கற்பூர விமிஶ்ரிதானி |
தாம்பூல வல்லீதள ஸம்யுதானி
பூகானி தே தேவி ஸமர்ப்பயாமி ||

ஏலக்காய், லவங்கம், கற்பூரம் கலந்த வெற்றிலைப்பாக்கை உமக்கு சமர்ப்பிக்கின்றேன்.

தாம்பூல நிர்ஜித ஸுதப்த ஸுவர்ண வர்ணம்
ஸ்வர்ணாக்த பூகபலமௌக்திக சூர்ணயுக்தம் |
ஸௌவர்ண பாத்ர நிஹிதம் கதிரேண ஸார்த்தம்
தாம்பூலமம்ப வதனும் புருஹோ க்ருஹாண ||

ஸ்வர்ண பாத்திரத்தில் வைக்கப்பட்டுள்ள பொன் போன்ற பாக்குப் பொடியையும், முத்துச் சுண்ணாம்பையும் ஏற்றுக் கொள்ளுங்கள்.

37. ஹாரத்தி

மஹதி கனக பாத்ரே ஸ்தாபயித்வா விஶாலான்
டமரு ஸத்ருஶ ரூபான் பத்தகோதூம தீபான் |
பஹுக்ருத மதேஷு ந்யஸ்ய தீபான் ப்ரக்ருஷ்டான்
புவன ஜனனி குர்வே நித்ய மாரார்த்திகம் தே ||

உலக நாயகியே! பொற்கிண்ணத்தில் உடுக்கை போன்று கோதுமை மாவால் செய்யப்பட்டுள்ள நெய் திரி கொண்ட தீபங்களால் உமக்கு தினமுமே ஆரத்தி எடுக்கிறேன்.

38. ஹாரத்தி

ஸவிநயமத தந்வா ஜாநுயுக்மம் தரண்யாம்
ஸபதி ஶிரஸித்ருத்வா பாத்ரமாராத்தி கஸ்ய |
முககமல ஸமீபே தேம்ப ஸார்த்தம் த்ரிவாரம்
ப்ரமயதிமயி பூயாத்தே க்ருபார்த்ர : கடாக்ஷ : ||

முழங்கால்களை பூமியில் வைத்து, ஹாரத்தி தட்டினை தலைமீது வைத்து, உங்கள் முகத்தருகே மும்முறைச் சுற்றும்பொழுது, உமது அருட்பார்வை என்மீது விழட்டும்.

39. தக்ஷிணை

அத பஹுமணி மிஶ்ரை: மௌக்தி கைஸ்த்வாம் விகீர்ய
த்ரிபுவன கமநீயை: பூஜயித்வா ச வஸ்த்ரை: |
மிலித விவித முக்தாம் திவ்ய மாணிக்ய யுக்தாம்
ஜனனி கனக வ்ருஷ்டிம் தக்ஷிணாம் தே(அ)ர்பயாமி ||

பல மணிகளுடன் கலந்த முத்துக்களை இறைத்து, மூவுலகிலும் அழகான வஸ்த்ரங்களால் அலங்கரித்து, பலவகை மாணிக்கங்களுடன் சுவர்ணத்தை தக்ஷிணையாகத் தருகிறேன்.

40. குடை

மாத: காஞ்சனதண்ட மண்டிதமிதம் பூர்ணேந்து பிம்பப்ரபம்
நாநாரத்ன விஶோபிஹேம கலஶம் லோகத்ரயாஹ்லாதகம் |
பாஸ்வன் மௌக்திக ஜாலிகாபரிவிருதம் ப்ரீத்யாத் மஹஸ்தே த்ருதம்
சத்ரம் தேபரிகல்பயாமி ஶிரஸி த்வஷ்ட்ராஸ் வயம் நிர்மிதம் ||

தங்கப் பிடியுள்ளதும், சந்திரன் காந்தியுள்ளதும், முத்துக்கள் வரிசையாகத் தொங்குவதுமான குடையை அன்புடன் அளிக்கின்றேன்.

41. சாமரம்

ஶரதிந்து மரீசி கௌர வர்ணை
மணிமுக்தா விலஸத் ஸுவர்ண தண்டை:
ஜகதம்ப விசித்ர சாமரை ஸ்த்வம்
அஹமா நந்த பரேண வீஜயாமி||

சந்திரன் போன்று வெண்மை நிறங்கொண்டதும், மணிமுத்துக்கள் விளங்கும் பொன் தண்டமுள்ளதுமாகிய அற்புத சாமரங்களை உமக்கு ஆனந்தத்தோடு அளிக்கிறேன்.

42. கண்ணாடி

மார்த்தாண்ட மண்டலநிபோ ஜகதம்ப யோயம்
பக்த்யா மயாமணிமயோ முகிரோர் பிதஸ்தே|
பூர்ணேந்து பிம்ப ருசிரம் வதனம் ஸ்வகீயமஸ்மின்
விலோக்ய விலோல விலோச நேஸ்வம்|

சஞ்சலமான கண்கள் உடையவளே! நான், உனக்கு சூரியனைப் போன்ற ஒளி மிகுந்த கண்ணாடியைத் தருகிறேன். நீ, உன்னுடைய சந்திரன் போன்ற முகத்தை அதில் பார்ப்பாயாக.

43. நீராஜனம்

இந்த்ராதயோ நதிநதைர் மகுடப்ரதீபை:
நீராஜயந்தி ஸததம் தவபாத பீடம்|
தஸ்மாதஹம்தவ ஸமஸ்த ஶரீர மேதந்
நீராஜயாமி ஜகதம்ப ஸஹஸ்ர தீபை:||

இந்திரன் முதலான தேவர்கள் வணங்கும் பொழுது, தங்களுடைய கிரீடமென்னும் தீபங்களால் உமக்கு நீராஜனம் செய்கிறார்கள். நான் உங்களுக்கு ஆயிரம் தீபங்களால் நீராஜனம் செய்கிறேன்.

44. குதிரைகள்

ப்ரியகதி ரதிதுங்கோ ரத்ன பல்யாண யுக்த:
கனகமய விபூஷ: ஸ்நிக்த கம்பீர கோஷ:|
பகவதி கலிதோயம் வாஹனார்த்தம் மயாதே
துரக ஶத ஸமேத: வாயு வேகஸ் துரங்க:||

ரத்ன சேனமும், பொன் ஆபரணங்களும் பூட்டி, கம்பீரமாய் கனைக்கின்ற, வாயுவேகமாகச் செல்லக்கூடிய நூற்றுக்கணக்கான குதிரைகளை உமக்கு வாகனமாக கல்பித்து அளிக்கிறேன்.

45, யானை

மதுகர வ்ருத கும்பந்யஸ்த ஸிந்தூர ரேணு:
கனக கலித கண்டா கிங்கிணீஶோபி கண்ட:|
ஶ்ரவண யுகள சஞ்சச் சாமரோ மேகதுல்ய:
ஜனனி தவமுதேஸ்யான் மத்தமாதங்க ஏஷ:||

வண்டுகள் சூழ்ந்த மத்தகத்தில் சிந்தூரத் துளிகள் உள்ள, மேகம் போன்ற மதயானையை உமது பிரியத்துக்காக உம்மிடம் அளிக்கிறேன்.

46. ரதம்

த்ருததர துரகைர் விராஜமாநம்
மணிமய சக்ர சதுஷ்டயேன யுக்தம்|
கனகமய மஹம்விதான வந்தம்
பகவதி தே ஹி ரதம் ஸமர்ப்பயாமி||

வேகமாகச் செல்லும் குதிரைகள் பூட்டிய தங்கத்தேரை உமக்கு அர்ப்பணிக்கின்றேன்.

47. சதுரங்க சேனைகள்

ஹயகஜ ரதபத்தி ஶோப மானம்
திமிதிமி துந்துபி மேகநாத யுக்தம்|
அதிபஹு சதுரங்க ஸைன்ய மேதம்
பகவதி பக்தி பரேண தே[அ]ர்ப்பயாமி||

ரத, கஜ, துரக, பதாதிகளுடன், ஒவ்வொரு திக்கிலும் துந்திபி நாதம் முழங்க, விளங்குகின்ற நால்வகைப் படைகளையும் மிகுந்த பக்தியுடன் உமக்களிக்கிறேன்.

48. கோட்டை

பரிகீ க்ருத ஸப்த ஸாகரம்
பஹு ஸம்பத் ஸஹிதம் மயாம்பதே விபுலம்|
ப்ரபலம் தரணி தலாபிதம்
த்ருட துர்க்கம் நிகிலம் ஸமர்ப்பயாமி||

ஏழுகடல்கள் எழிலுற சூழப்பட்டதும், மிகுந்த செல்வம் கொண்டதும், பரப்பளவு உள்ளதுமான பூமி என்னும் பெயருள்ள கோட்டையை உமக்கு கொடுக்கிறேன்.

49. விசிறி

ஶதபத்ர யுதை: ஸ்வபாவ ஶீதை
அதி ஸௌரப்ய யுதை: பராக பீதை:|
ப்ரமரீ முகரீ க்ருதை ரநந்தை:
வ்யஜனை ஸ்த்வாம் ஜகதம்ப வீஜயாமி||

குளிர்ச்சியும், நறுமணமுள்ளதும், புஷ்ப தூளியால் சிவந்ததும், வண்டுகள் ரீங்காரம் செய்வதுமான விசிறியால் விசுறுகிறேன்.

50. நாட்டியம்

ப்ரமர லுலித லோல குந்தலாலீ
விகளித மால்ய விகீர்ண ரங்கபூமி:|
இயமதி ருசிரா நடீ நடந்தீ
தவஹ்ருதயே முதமாதநோது மாத:||

வண்டுகள் மொய்ப்பதால் சஞ்சலமான குந்தளத்திலிருந்து விழுந்த புஷ்பங்கள் இறைந்து கிடக்கும் இடமே நாட்டிய பூமி. அங்கு நடமிடும் நடீ உனக்கு சந்தோஷம் தரட்டும்.

51. நடனம்

முகநயன விலாஸ லோல வேணீ
விலஸித நிர்ஜித லோல ப்ருங்கமாலா|
யுவஜன ஸுகாரி சாருலீலா:
பகவதி தே புரதோ நடந்தி பாலா:||

முகம், கண் இவைகளின் அபிநயத்தால் அசைகின்ற வேணியின் விலாசம், வரிசையாகச் சுற்றி வரும் வண்டுகள் வரிசையை விட அழகாக இருக்கின்றது. நடனக் கலையில் சிறந்த மங்கையர் உம்முன் நடனமாடுகின்றனர்.

52. தாசி நடனம்

ப்ரம நளிகுல துல்யா லோலதம் மில்ல பாரா:
ஸ்மிதமுக கமலோத்யத் திவ்ய லாவண்ய பூரா:|
அநுபமித ஸுவேஷா வாரயோஷா நடந்தி
பரப்ருத கலகண்ட்ய: தேவிதைன்யம் துநோது:||

அழகானவர்களும், ஒப்பற்ற வேடம் பூண்டவர்களும், குயில் போன்ற குரலினிமை யுடையவர்களுமான தாசிகளின் நடனம் ஏழ்மையை அகற்றட்டும்.

53. வாத்யம்

டமரு டிண்டிம ஜர்ஜர ஜல்லரீ
ம்ருதுரவத்ர கடத்ர கடாதய:|
஝டிதி ஜாங்க்ருத ஜாங்க்ருதை:
பஹுதயம் ஹ்ருதயம் ஸுகயந்துமே||

டமரு, டிண்டிம, ஜர்ஜ்ர ஜல்லரீ, த்ரகடம் ஆகிய வாத்தியங்களின் சப்தம் மனதைச் சுகப்படுத்தட்டும்.

54. கானம்

விபஞ்சீஷு ஸப்தஸ்வரான் வாத யந்த்ய:|
தவந்திகே காயந்தி கந்தர்வ கன்யா:|
க்ஷணம் ஸாவ தாநேன சித்தேன மாத:
ஸமா கர்ணய த்வம் மயா ப்ரார்த்திதாஸி||

கந்தர்வக் கன்னியர்கள் வீணையில் கானம் செய்கின்றார்கள். அந்த இசை இனிமையை நானும் கேட்க வேண்டுமென பிரார்த்திக்கிறேன்.

55. நர்த்தன அபிநயம்

அபிநய கமநீயைர் நர்த்தனைர் நர்த்தகீனும்
க்ஷணமபி ரமயித்வா சேத ஏதத் த்வதீயம்|
ஸ்வய மஹமதி சித்ரை: ந்ருத்த வாதித்ர கீதை:
பகவதி பவதீயம் மானஸம் ரஞ்ஜயாமி||

நடன மாதர்கள் அழகான அபிநயத்தால் மகிழ்விப்பதுபோல, நானும் ந்ருத்த வாத்தியங்களால் உங்களை மகிழ்விக்கிறேன்.

56. ஸ்துதி

தவ தேவி குணானு வர்ணனே
சதுரா நோ சதுரானனாதய:|
ததிஹைக முகேஷு ஜந்துஷு
ஸ்தவநம் கஸ்தவ கர்துமீஶ்வர:||

நான்கு முகம் கொண்ட பிரம்மா முதலான தேவர்களாலேயே உமது குணத்தை வர்ணிக்க முடியாதெனில், ஒரு முகம் கொண்ட மனிதர்களால் எங்ஙனம் முடியும்?

57. ப்ரதக்ஷிணம்

பதேபதேயத் பரிபூஜ கேப்ய:
ஸத்யோஶ்வ மேதாதி பலம் ததாதி|
தத்ஸர்வ பாப க்ஷயயேது பூதம்
ப்ரதக்ஷிணம் தே பரித: கரோமி||

பிரதக்ஷிணம் செய்பவர்களது ஒவ்வொரு அடியிலும் 'அச்வ மேதப் பலம்' கிடைக்கிறது. எனவே, பாபங்கள் தீரும் வகையில் நாற்புறமும் பிரதக்ஷிணம் செய்கிறேன்.

58. நமஸ்காரம்

ரக்தோத்பலா ரக்தலதா ப்ரபாப்யாம்
த்வஜோர்த்வா லேகா குலிசாங்கிதாப்யாம்|

அஶேஷ ப்ருந்தாரக வந்திதாப்யாம்
நமோ பவாநீ பத பங்கஜாப்யாம்||

தேவர்களால் வணங்கப்படுகின்ற செந்தாமரை போன்ற பவாநியே! உன் பாதகமலங்களில் நமஸ்கரிக்கிறேன்.

59. புஷ்பாஞ்ஜலி

சரண நளினயுக்மம் பங்கஜை: பூஜயித்வா
கனக கமலமாலாம் கண்டதேஶே அர்பயித்வா|
ஶிரஸி விநிஹிதோயம் ரத்ன புஷ்பாஞ்ஜலிஸ்தே
ஹ்ருதய கமலமத்யே தேவி ஹர்ஷம் தநோது||

கமலத்தால் பூஜித்து, கமலத்தை அணிவித்து, உன்னுடைய முடிமேல் நான் வைக்கும் ரத்ன புஷ்பாஞ்சலி, என்னுடைய இருதயத்தில் சந்தோஷத்தை அளிக்கட்டும்.

60. அந்தப்புரம்

அதமணிமய மஞ்சகா பிராமே
கனகமய விதான ராஜமானே|
ப்ரஸரதகரு தூபதூபிதேஸ்மின்
பகவதி பவநேஸ்து தே நிவாஸ:||

மணிமயமான மஞ்சம்; அழகான விதானம்; அகரு தூபம் புகை; இவ்வாறு விளங்குகின்ற அந்தப்புரத்திற்கு வாருங்கள்.

61. கட்டில்

ஏதஸ்மின் மணிகசிதே ஸௌவர்ண பீடே
த்ரைலோக்யா பயவரதௌ நிதாய ஹஸ்தௌ|
விஸ்தீர்ணே ம்ருதுலதரோத்தரச் சதேஸ்மின்
பர்யங்கே கனகமயே நிஷீத மாத:|

மூவுலகுக்கும் வரமளிப்பவளே! விசாலமான, மேல்விரிப்புள்ள, ரத்தினக் கட்டிலில் வந்து அமருங்கள்,

62. நலங்கு

தவதேவி ஸரோஜ சின்னயோ:
பதயோர் நிர்ஜித பத்மராகயோ:|
அதிரக்த தரை ரலக்தகை:
புனருக்தாம் ரசயாமி ரக்ததாம்||

தாமரை அடையாளமுள்ளதும். பத்மராகம் போன்றதுமான உமது சிவந்த திருவடிகளுக்கு செம்பஞ்சுக் குழம்பினால் நலங்கிட்டு, மேலும் செம்மையாக்குகிறேன்.

63. வாய் கொப்புளித்தல்

அதமாத ருஸீர வாஸிதம்
நிஜதாம்பூல ரஸேன ரஞ்ஜிதம்|
தபநீய மயேஹி பட்டகே
முககண்டூஷ ஜலம் விதீயதாம்||

வெட்டிவேர் வாசனையுடன், உமது தாம்பூல ரசத்தால் சிவந்து போன வாயிலுள்ள நீரை, இந்தப் பொற்கிண்ணத்தில் கொப்புளியுங்கள்.

64. படுக்கை (சயனம்)

க்ஷணமத ஜகதம்ப மஞ்சகேஸ்மின்
ம்ருதுதர தூலிகயா விராஜமானே|
அதிரஹஸி முதா ஶிவேன ஸார்த்தம்
ஸுகஶயனம் குருதத்ர மாம் ஸ்மரந்தி||

மிகவும் மென்மையான மெத்தையுடன் கூடிய கட்டிலில் க்ஷண நேரம் சிவனுருடன் மகிழ்ச்சியுடன் படுத்துக் கொள்வீராக. அந்தச் சமயத்தில் என்னை உங்கள் மனதில் நினைத்துக் கொள்ளுங்கள்.

த்யானம்

முக்தா குந்தேந்து கௌராம் மணிமய
மகுடாம் ரத்ன தாடங்க யுக்தாம்
அக்ஷஸ்ரக் புஷ்ப ஹஸ்தாம் அபய வரகராம்
சந்த்ர சூடாம் த்ரிணேத்ராம்|
நானாலங்கார யுக்தாம் ஸுரமகுட
மணித்யோதித ஸ்வர்ண பீடாம்
ஸானந்தாம் ஸுப்ரஸன்னாம் த்ரிபுவன
ஜனனீம் சேதஸா சிந்தயாமி||

முத்து, குந்தம், சந்திரனைப் போன்று சிவப்பு நிறம் கொண்டவளும், மணிக்கிரீடமுள்ளவளும், ரத்தனத் தோடுகள் அணிந்தவளும், ஜபமாலை, புஷ்பத்தை கரங்களில் ஏந்தியவளும், அபயவரத முத்திரைகளோடு சந்திரனைத் தலையில் சூடியவளும், மூன்று கண்கள் உள்ளவளும், அலங்காரமான தேவர்களது மகுடத்தை பாத பீடமாகக் கொண்டவளும், ஆனந்தமானவளும், மூவுலகுக்கும் தாயாகிய தேவியே! நான் உன்னை என் மனதினில் தியானிக்கிறேன்.

க்ஷமை வேண்டல்

ஏஷா பக்த்யா தவ விரசிதா யாமயா தேவிபூஜா
ஸ்விக்ருத்யைநாம் ஸபதி ஸகலான் மே(அ)பராதான் க்ஷமஸ்வ|
ந்யூனம் யுத்தத்தவ கருணயா பூர்ணதாமேது ஸத்ய :
ஸானந்தம் மே ஹ்ருதய கமலே தேஸ்து நித்யம் நிவாஸ : ||

தேவி! நான் பக்தியுடன் மானஸிகப் பூஜை செய்கிறேன். அதை ஏற்று, என்னுடைய தவறுகளைப் பொறுத்துக் கொள்வாயாக. பூஜையில் குறையிருக்குமானால், அதை உனது கருணையால் பூர்த்தி செய்வாயாக. எனது இருதய கமலத்தில் ஆனந்தமாக என்றும் வசிக்க வேண்டும்.

பலன்

பூஜாமி மாம்ய : படதி ப்ரபாதே
மத்யான்ன காலே யதிவா ப்ரதோஷே |
தர்மார்த்த காமான் புருஷோ (அ)நப்யுபைதி
தேஹாவ ஸானே சிவபாவ சிவபாவ மேதி ||

. இந்த மானஸிக உபசார பூஜையை, காலை, நடுப்பகல், மாலை வேளைகளில் படிப்பவர்கள் தர்மார்த்த காம மோக்ஷங்களைப் பெறுவர்.

பூஜாமிமாம் படேன் நித்யம் பூஜாங்கர்து மனீஶ்வர : |
பூஜாபல மவாப்நோதி வாஞ்சிதார்த்தஞ்ச விந்ததி ||

முறைப்படி பூஜை செய்ய முடியாதவர்கள், இதை தினமும் படிப்பதினாலேயே பூஜாபலனையும், விரும்பிய பலனையும் அடைவர்.

ப்ரத்யஹம் பக்திஸம்யுக்த : ய : பூஜனமிமம் படேத் |
வாக்வாதின்யா : ப்ரஸாதேன வத்ஸராத் ஸகவிர்பவேத் ||

தினத்தோறும் இதைப் படிப்பவர் வாக்வாதினியின் திருவருளால் ஓராண்டிற்குள் நல்ல கவிஞராவார்.

64 உபசார பூஜாவிதி முற்றுப்பெற்றது.

புண்யாஹ வாசனம் பற்றி

ஆதிசங்கரர்

கர்மாக்களை செய்வதற்குமுன், சுத்தி ஏற்படுவதற்காக புண்யாஹ வாசனம் என்ற சம்ஸ்காரம் ஏற்பட்டிருக்கிறது. எல்லாக் கர்மாக்களுக்கும் இந்த புண்யாஹவாசனம் உண்டு. இது பாஹ்ய புண்யாஹவாசனம். ஆந்த்ர புண்யாஹவாசனம் பற்றி ஆதிசங்கரர் தமது சிவானந்த லஹரியில் குறிப்பிட்டிருக்கிறார்.

"பக்தோ பக்திகுணவ்ருதே முதம் ருதாபூர்ணே ப்ரஸன்ன மன:- கும்பே ஸாம்ப தவாங்க்ரி பல்லவயுகம் ஸம்ஸ்தாப்ய ஸம்வித்பலம் |

ஸத்வம் மந்த்ர முதீரயந்நிஜ சரீராகார சுத்திம் வஹன், புண்யா ஹம் ப்ரகடீ கரோமி ருசிரம் கல்யாண மாபாதயன் ||"

—சிவானந்தலஹரீ—(௩௬)

இந்த அத்யாத்ம புண்யாஹ வாசனத்திற்கு படிப்பு மட்டும் இருந்தால் போதாது. பக்தி வேண்டும். பகவானிடம் பரம ப்ரேமை இருக்க வேண்டும். அதில் மனம்தான் கும்பம். அதை பக்தி என்ற நூலால் சுற்றி சந்தோஷம் என்ற ஜலத்தால் நிரப்ப வேண்டும். குடம் தேய்த்தபின் சுத்தமாக இருப்பது போல, மனமும் சுத்தமாக இருக்க வேண்டும்.

பகவத் ஸ்மரணமே துளிர்களும், மாவிலைகளும். சுத்த ஞானமே தேங்காய். பாஹ்ய புண்யாஹ வாசனத்திற்கு நிறைய மந்திரங்கள் உண்டு. இதில் உள்ள சாரம், இறைவனைத்தவிர வேறு ஜீவன் இல்லை என்ற ஒரே மந்திரம்தான்.

தேவி மானஸீக பூஜா ஸ்தோத்ரம்

கல்யாணோஜ் ஜ்வலகார்முகாஞ்சித கராம் காந்தேந்து மந்தஸ்மிதாம்
காருண்யாங்குச பஞ்சபாண கலிதாம் கந்தர்ப தர்ப்போன்னதாம்|
காம்யாகர்ஷண திவ்ய பாசபரிதாம் பாலார்க்க கோடிப்ரபாம்
காதி க்ஷாந்த தநுத்ரயாம் த்ரிநயனாம் த்யாயே சிவாம் சாம்பவீம்||
1||

ஏகாகாரதயா ப்ரபஞ்ச பரிதாமேகாந்த ஸம்சாரிணீ—
மேணாங்கோஜ் ஜ்வல ஸம்விதம்பரகலா மேணாங்க பிம்பாநநாம்|
ஏகோ தைவமிதி ப்ரஸித்தமணிபி: ப்ரக்யாத சின்மாத்ரகா—
மேகாராங்கித பைந்தவீம் பரசிவா மேகாக்ஷரீ மாவஹே|| ௨||

[த்ரிகண்ட முத்ரேண பஞ்சப்ரஹ்ம ஸஹிதம் ஸ்ரீ வித்யா ஸம்மேளன மந்த்ர ஸஹித மித்யாதி த்யானேன சிவசக்தி மாவஹயாமி ஆவாஹனுதி ஷண்முத்ராம் ப்ரதர்ஸ்ய, இதி த்யாத்வா||]

ஈசாநாதி மஹேசருத்ர சிஷ்ட ப்ரஹ்மாண்ட பாதோன்னதே
ஹ்ரீங்காராங்கித திவ்யரத்ன விலஸத் ஸிம்ஹாஸனே ஸம்ஸ்திதே|
ஷத்பத்தயா து திவ்யசரணம் போஜார்சனைர் யுக்தவா
நிச்சாஜ்ஞா நகலா க்ரியாஸன மிதம் தாஸ்யாமி தே சாம்பவி|| ௩||

லக்ஷ்யஜ்ஞான ஸுதா ரஸார்ணவ ஜலைராபூர்ய பாதார்க்யகம்
லாக்ஷாலங்க்ருத பாத பங்கஜயுகம் ஸம்க்ஷால்ய பவத்யா புன:|
லக்ஷ்மீ ரஞ்ஜித ஹேம தாம கலசாநாபூர்ய ஶீதாம்புனு
லாசாமாத்மதயா ப்ரகல்பித தநும் க்ருஹ்ணுது தே சாம்பவி|| 4||

ஹ்ரீங்காரோஜ் ஜ்வல வர்ணமந்த்ர கமலாலங்கார ஸிம்ஹாஸனே
ஹ்ரீங்காராந்த ஸரஸ்வதீ ச யமுனு கங்கா ஜலைராதராத்|
ஹ்ரீங்காராதி ஸமஸ்த ஸித்த கலசைஸ் ஸம்ஸ்தூய மானைர்முதா
ஹ்ரீங்காரீமபிஷேகயாமி ஸததம் ஹ்ரீங்கார பத்மேக்ஷணும்|| 5||

[ஶ்ரீ ருத்ரம் பஞ்சசாந்திம் புருஷஸுக்தம் பஞ்சப்ரஹ்ம மந்த்ரேண மூலமந்த்ரேண ஏகவாரம் ஜப்த்வா, இத்யாதி அபிஷேகம் த்யாத்வா||]

ஹவ்யாருடதர ப்ரகாச ஸுபகே க்ஷெளமாம்பரம் பக்திதோ
ஹம்ஸஸ்பாடிக சந்த்ரிகாப மமலம் பக்த்யாஸிதோத்தர்யகம்|
ஹாராலங்கதபீவரஸ்தனபரா மானந்த மத்தஸ்மிகாம்
ஹவ்யாதீதபதா மனுங்கி விபவா மாராத்யாம் யம்பிகே|| 6||

ஸௌவர்ணுஜ் ஜ்வல ரத்னகுண்டலயுதம் ஸௌபாக்ய நாஸாமணிம்
ஸாந்த்ரானந்த கர ப்ரஸித்த மணிபிஸ் ஸாந்த்ரம் கிரீடம் சுபம்|
ஸர்வாலங்க்ருத பாஹு தண்ட வலய க்ரைவேய ஹாரான் பஹுன்
ஸம்லாபாஞ்சித காஞ்சிநூபுரயுதம் க்ருஹ்ணுது தே சாம்பவீ|| 7||

கஸ்தூரி கனஸார குங்குமரஜோ கந்தோத் கடைச்சந்தனை:
கர்ப்பூரைச்ச விதாரகாபமமலம் பக்த்யா ஸமர்ப்யார்ச்சிதம்|
கல்ஹாரோத்பல ஜாதி சம்பகரஜை: பத்மைச்ச ஸௌகேதகை:
காஞ்சீ மல்லிக கல்பவ்ருக்ஷ குசுமைரப்யர்ச யாமீச்வரீ|| 8||

ஹாஹாகார ரவாப்ரஸித்த கலனுஹங்கார ஹந்தாத்மிகாம்
தூபம்தேவி ஸுகல்பயாமி ஸததம் ப்ரஹ்மேந்த்ர வந்த்யே ஶிவே|
ஹம்பீஜா: ஸகலாகமார்த்த விபவாஹ்ருல்லேக சக்ராத்மிகாம்
ஹாரிந்த்ராங்கித ஹிமதாம விபவைர் க்ருஹ்ணீஷ்வ தீபம் மஹத்|| 9||

லம்பீஜாஞ்சித ஸித்தமார்க்க ஸஹஜைர் த்ரவ்ய ரனந்தைர்முதா
லங்காராங்கித வஹ்நிபானு சசிபி: பாத்ரைஸ் ஸுதாபூரிதம்|
விப்தம்மோத மரீசிஹிங்கு ஸுரபியுக்தைஸ் ஸுபகைக்ஷஸ் ஸதா
லக்ஷ்மீராஞ்சித ஹேமதாம விபவைஸ் ஸந்தர்ப்பயா மீச்வரீம்|| 10||

ஹ்ரீங்காரத்ரய வஹ்நிபீட நிலயே ஹ்ரீங்கார மந்த்ராத்மிகே
ஹ்ரீங்காரத்ரய வஹ்நிபீட சஷகே ஸித்தான்ன பக்ஷ்யான் பஹுன்
ஹ்ரீம் ஶ்ரீம் கல்பித காமதேனு நிதயா க்ஷீராஜ்ய மத்வாம்ருதம்
ஹ்ரீங்காரேண நிவேதயாமி ஸததம் ஹ்ரீங்கார நாதப்ரியே|| 11||

[கோக்ருதான் ஸுபக்வான் பக்ஷ்யான் ஸுபோஜ்யான் ஸுலேஹ்யான் பரமான்னம் மஹாசோஷ்யான்னம் நிதாய||]

நாஞுசாகைருபேதம் மதுகுலஸஹிதம் க்ஷீரபானிய யுக்தம்
தாம்பூலேச்சரத்மலிங்க ப்ரதிதிவஸமயே மானஸே அர்ப்பயாமி||
ஸர்வார்த்தாய பராபராங்க ஸலிலம் ஸௌகந்த கந்தைர்யுதம்
ஸௌந்தர்யேச்வர வல்லபே பரமிவே க்ருஹ்ணீஷ்வ ஹஸ்தோதகம்|

ஸல்லாபார்ணவ கௌதுகாம்ருதரஸம் ஸம்பூர்ண சந்த்ரப்ரபம்
ஸத்கர்ப்பூரயுதம் க்ருஹாணவரதே தாம்பூல மவ்யாஹதம்|| 12||

காதி க்ஷாந்தகதா ஸுராதி மணிபிஸ் ஸங்கீர்ண தீபாங்குரான்
காலேகத்ரய பஞ்சஸப்த நவகே த்ரைவர்ண பாத்ரைர்முதா|
காவ்யாலங்க்ருத நாடகாதி ச்ருதிபிஸ் ஸங்கீத ந்ருதைர்முதா
கல்லோலாத்புதமம் க்ருஹாண வரதே நீராஜனம் நிர்மலம்|| 13||

லாவண்யாங்க கமாதி பஞ்சகமிதம் ஸன்மார்க்க மார்க்கோதயம்
சத்ரம் சாமர சோபிதம் வ்யஜனகம் ரத்னோஜ்ஜ்வலம் தர்ப்பணம்|
காலீகூஜித பாதபங்கஜயுதம் ஸம்பூஜ்ய கந்தாக்ஷதை:
லக்ஷ்மீம்சக்ர நிவாஸினீம் க்ரமகதாம் ஸந்தர்ப்ப யாமீச்வரீம்|| 14||

[ஸர்வ முத்ராம் ஸர்வ ஸ்தோத்ரம் படித்வா, மூலமந்த்ரம் அஷ்டாவிம்சதி வாரம் ஜபித்வா உத்வாஸனம்.]


ஹ்ரீங்காரீம் மிவதத்வநாம நிலயாம் ஹ்ரீங்கார மந்த்ராத்மிகாம்
ஹ்ரீங்காரத்ரய வாக்பவாதி முனிபிஸ் ஸம்சோத்ய ஜபதத்ரயம்|
ஜப்த்வா மந்த்ரஹவாதி காதிமுனிபிர்னுத்வா புனஸ்சாம்பவீம்
ஸ்ம்ருத்வா சங்கரவல்லபே த்ரிணயனு முத்வாஸ யாமீச்வரீம்|| 15||

மாயாகுண்டலினீ க்ரியா மதுமதீ காளிகலா மாலினி
மாதங்கீ விஜயா ஜயா பகவதி தேவீ மிவாசாம்பவீ|
சக்திஸ்சங்கரவல்லபா த்ரிணயனு வாக்வாதினி பைரவீ
ஹ்ரீங்காரீ த்ரிபுரே பராபரமயீ மாதா குமாரீத்யஸி|| 16||

மாதர்மே மதுகைடபக்னி.........துர்க்கே நமஸ்தேம்பிகே||
வாசாவா மனஸாதவா கிரிஸுதே காயேன வா ஸந்ததம்
மீனுக்ஷீதி கதாசிதம்ப குருதே த்வன் நாம ஸங்கீர்த்தனம்|
லக்ஷ்மீஸ்தஸ்ய க்ருஹே வஸத்யனுதினம் வாணீஜ வக்த்ராம்புஜே
தர்மாத்யர்த்த சதுஷ்டயம் கரதலம் ப்ராப்தம் பவேந்நிச்சாய:|| 17||

கல்யாணீமேக போதாம் அருணதனுலதாம்மீச்வரீம் லக்ஷணுங்கீம்
ஹ்ரீங்காரீம் ஹர்ஷஸாந்த்ராம் ஸஹஸமதபராம் கல்பவல்லீம் ஹராட்யாம்:
லக்ஷ்மீம் ஹ்ரீங்கார பூஷாம் ஸகலஸுகமயீம் ஹ்ரீம்பதஸ்தாம் த்ரிணேத்ராம்
அம்பாம் பாசாங்குசேக்ஷு ப்ரஸவசரகராம் த்ரைபுரீம் தாம் நமாமி||

தேவீ மானஸிக பூஜா ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்||



இதர மானஸீக பூஜைகள்

6

ஸ்ரீ கணேச மானஸ பூஜை

வாத்ஸல்யபா ஜனமகாதிப கன்ய காயா
மாத்ஸர்ய சூன்ய ஹ்ருதயைர் புவி பாவனீயம்|
ப்ரத்யூஹஜாத விநிபாதன லப்த வர்ணம்
அத்யூர்ஜிதம் ஹ்ருதி பஜாமி கணாதிநாதம்|| 1

அன்னை பராசக்தியின் ஆனந்த மகனே! சித்தர்கள் வணங்கிடும் சிவனாரின் மைந்தனே! சீலனே! விக்னங்களைத் தீர்க்கும் விநாயக! கணேசா! நான் உன்னை ஒன்றுபட்ட மனதுடன் நின் புகழைப் பாடுகிறேன்.

ஆவாஹயாமி கணநாத முமா மஹேச
ஸர்வஸ்வ பூதமபநீத துரந்தராயம்|
யோகீந்த்ரமானஸ ஸரோருஹ ஸம்விகாஸ—
லீலாவிசேஷ சதுரம் நிகமாந்த நிஷ்டம்|| 2

உமா மஹேசர் செல்வமே! மாதவரிதயத்திற்கு ஆதவனே! வேதாந்தப் பொருளே! உம்மை ஆவாஹனம் செய்கிறேன்.

மாணிக்ய மஞ்ஜுல மரீசி மனோஜ்ஞ பார்ஸ்வம்
ஸாந்த்ரீபவன் மரகதாவலி மேச காபம்|
முக்தாமணி ப்ரகரமே துரிதாந்தராலம்
ரத்னாஸனம் தவ ஹ்ருதா பரிகல்பயாமி|| 3

மாணிக்கக் கிரணங்கள் விளங்குகின்றதும், மரகதம், முத்துக்களால் நிறைந்ததுமான ரத்னாஸனத்தை உமக்கு அளிக்கிறேன்.

கங்காதி புண்யஸரிதாம் பரிபூத தீர்த்தை:
பாத்யம் தவா(அ)த்யவதி சூன்ய ஸமர்ப்பயாமி |
அர்க்யம் ததாம்யஹ மநர்க்க குணாபிராம
ப்ரத்யூஹவாரண ஸவாரணவக்த்ர துப்யம் || 4||

ஆதியந்த மற்றவனே! உனக்கு, கங்கை முதலிய நதிகளின், புண்ணிய தீர்த்தங்களினால் பாத்யமும், அர்க்யமும் சமர்ப்பிக்கிறேன்.

ப்ரத்யாஹ்ருதை ரகில புண்ய ஸரித்வராப்ய :
தீர்த்தைர் ததாம்யமல மாசமனம் ச துப்யம் |
ஸூக்தாதி மந்த்ர நிவஹைரபி மந்த்ரிதைஶ்ச
புண்யோதகைஸ்தவ ஶிர : ஸ்நபயாம் யஜஸ்ரம் || 5||

புண்ணிய நதிகளின் தீர்த்தத்தால் ஆசமனமும், புருஷ ஸூக்தம் முதலான மந்த்ரங்களால் உச்சாடனம் செய்யப்பட்ட தீர்த்தங்களால் உமக்கு ஸ்நானமும் செய்விக்கிறேன்.

ஆரூட மாசரணமப்ய பிஷிச்ய தீர்த்தை :
ஆலோகயந்தகில மங்கல மானனம் தே |
ஆனந்த நிர்பரம நாஶ்சுலுகீக்ருதாக்ஷ :
கிம் வா பவாமி ஸபலீக்ருத புண்யஜன்மா || 6||

பாதாதி கேசம் உனக்கு அபிஷேகம் செய்து, உன் அழகு முகத்தை கண்ணாரக்கண்டு, ஆனந்தமடைந்து, பிறவிப்பயனை நான் பெறுவேன்.

கஸ்தூரிகா குமகுமீக்ருத சந்தனானி
திவ்யம் துகூலயுகலம் ச ததாமி துப்யம் |
யஜ்ஞோபவீத மபிமந்த்ரித மர்ப்பயாமி
திவ்யாம்ஶ்ச பூஷணகணான் ப்ரதிபாதயாமி || 7||

கஸ்தூரி கலந்த சந்தனம், பட்டாடைகள், யஜ்ஞோபவீதம், ஆபரணங்கள் முதலியவைகளை உனக்கு சமர்ப்பிக்கின்றேன்.

ஜாதீஸு சம்பக ஸரோருஹ குந்தமல்லீ
பில்வாதிபிர் பஹுவிதை ரிதரைஶ்ச புஷ்பை : |
த்வாமர்ச்சயந்நமரஸம்ஹதி ஸேவ்யமானம்
ஆராத் பஜாமி து கதா க்ருதக்ருத்ய பாவம் || 8||

விண்ணவர் தலைவனே! உம்மை, ஜாதி, சம்பகம், தாமரை, தும்பை, மல்லி, பில்வம் முதலிய நறுமண மலர்களால் அர்ச்சித்து கிருதார்த்தனாவேன்.

ஸ்வாமின் ததாம்யகரு குக்குலு சந்தனாதி
தூபான் ஸுகந்தபரிதான் ஶிவஸூநவே தே |
ஆஜ்ய ப்லுதாமல ஸுவர்த்தி பிரேத மானம்
ஆதர்சயாமி நனு தே தபநீயதீபம் || 9||

சிவனருள் சேயே! அகில், சாம்பிராணி, சந்தனம் நிறைந்த மணம் கமழும் தூபத்தையும், நெய் திரியுடன் கூடிய தீபத்தையும் காண்பிக்கிறேன்.

சோஷ்யைஸ்ச பக்ஷ்ய நிவஹைஸ்ச கரம்பிதம் தே
போஜ்யம் ததாமி கணநாயக திவ்யமன்னம் |
ஆமோதகம் ச கிரிஜாஸுத மோதகானும்
ஸ்வாமின் பர : சதமபி ப்ரதிபாதயாமி || 10||

மலைமகள் மைந்தா! சோஷ்யம், பக்ஷ்யம், லேஹ்யம், போஜ்யம் என்ற நான்கு வகை உணவுகளையும், உமக்குப் பிரிய மான கொழுக்கட்டைகளையும் அன்புடன் கொடுக்கிறேன்.

ஆனர்த்ரநாகிகண மஞ்ஜுல மௌலிமாலா
நிராஜ்யமான சரணத்வய விக்னஹந்த : |
கர்பூரதீப நிவஹைஸ்தவ பாதபத்மம்
நீராஜயாமி நனுமாம் பரிபாஹி பக்தம் || 11||

வினையகற்றும் விநாயகா! உன்னுடைய பாத கமலங்களை கற்பூர தீபங்களால் ஆராதிக்கிறேன்.

புஷ்பாஞ்ஜலிம் ப்ரகுரயாமி ஸ்வர்ண புஷ்பை :
ஸன்மந்த்ர புஷ்பமபி ச ப்ரதி பாதயாமி |
ஸர்வோபசார நிவஹாம்ஸ்ச ஸமர்ம்பயாமி
ஸ்வாமின் கணாதிப ஸமுத்தர மாம் பவாப்தே || 12||

கணபதி! ஸ்வர்ண புஷ்பங்களால் புஷ்பாஞ்ஜலியும், மந்த்ர புஷ்பங்களும் சாத்துகின்றேன். எல்லா விதமான உபசாரங்களையும் செய்கிறேன். பிறவிப் பெருங்கடலிலிருந்து என்னைக் கரையேற்றி விடவேண்டும்.

நாரோக்யமத்ய கலயே ந ச போக்யஜாதம்
பாக்யம் ந வா விஷயலம்படதாநிதானம் |
வைராக்ய மேவ ஸுதராமுபலம்பயன் மாம்
ஸ்வாமின் ஸமுத்தர பவாம்புதே தேர்துரந்தாத் || 13||

சுவாமி! இப்பொழுது எனக்கு ஆரோக்யம், போகம், பாக்கியம் எதுவுமே வேண்டாம். வைராக்கியம் ஒன்றுதான் வேண்டும். அதையளித்து எனக்கு அருள் புரிவாயாக.

இத்தம் கணாதிபதி மானஸபூஜனம் ய :
கைவல்யதம் ஸுலலிதம் படதீஹ பக்த்யா |
நாகாமி ஜன்மபயமஸ்தி ஹி தஸ்ய பும்ஸ :
கைவல்ய ஸௌாதமசிரா தனுவிக்ஷதே ஸ : || 14||

முக்திக்கு வழிகாட்டும் இந்த கணேச மானஸ பூஜையை பக்தி யுடன் படிப்பவர்களை பிறவியென்பது அணுகாது. வீடுபேறு விரைவில் கிட்டும்.

மூஷிக வாஹன மோதாஹஸ்த
சாமரகர்ண விலம்பித ஸூத்ர |
வாமனரூப மஹேஸ்வர புத்ர
விக்னவிநாயக பாத நமஸ்தே ||

மூஷிக வாகனமும், மோதகக் கையும், முறம் போன்ற காதுகளும், தொங்கும் பூணூலும் கொண்டு குள்ள வடிவாகயிருக்கும் வினயகற்றும் விநாயகனே ! உன்னுடைய பாதங்களுக்கு நமஸ்காரம்.

ஸூரிய மானஸ பூஜை

ப்ரத்தியக்ஷமாக கண்ணுக்கு காட்சி அளிக்கும் தெய்வம் சூரியன் ஒருவரே. சூரியனுக்கு நமஸ்காரம் செய்வதே, அவருக்குப் பிரியத்தைக் கொடுக்கும். ஊனக்கண்களுக்கு. காட்சி அளிக்கும் சூரியனைப்போல, மற்ற தெய்வங்களை நாம் கண்ணால் காணமுடியாது.

யோக நெறியில் நின்று, தவ வாழ்க்கையை மேற்கொண்ட ஞானிகளால்தான், அதுவும், தம்முடைய அகக் கண்களால்தான் காண முடியும்.

எனவே புறக்கண்களுக்கு காணப்படாத, மற்ற தெய்வங்களை வழிபடுவதற்காக, மானஸ பூஜையைப்பற்றி விளக்கிய ஞானிகள், சூரியனுக்கு மட்டும் மானஸீகபூஜை வழிபாட்டு முறைகளை அமைக்கவில்லை என்பதோடு, சூரியனுக்கு நமஸ்காரங்கள் செய்து, அவருக்கும் பிரியத்தை உண்டுபண்ணி, நீங்களும் சந்தோஷப் படுங்கள் என்று விட்டு விட்டார்கள். சூரியனைப் பற்றிய முழு விபரங்களும் "பிரதிபா"வின் "ஆதித்ய ஹ்ருதயத்தில்" காணவும்.

விஷ்ணு மானஸ பூஜை

ஹ்ருதம் போஜே க்ருஷ்ண : ஸஜலஜலத ச்யாமலதனு :
ஸரோஜாக்ஷ : ஸ்ரக்வீ மகுட கடகாத் யாபரணவான் |
சரத் ராகாநாத ப்ரதிமவதன : ஸ்ரீ முரளிகாம்
வஹன் த்யேயோ கோபிகண பரிவ்ருத : குங்குமசித : || 1

காராருமேனியன், கமலநயனன், வனமாலாதாரி, மதிவதனன், வேணுகரத்தன் என்றெல்லாம் புகழப்படும், கோபிகைகளால் சூழப் பட்டு குங்குமத்துடன் விளங்கும் ஸ்ரீ கிருஷ்ணனை என் மனத் தாமரையில் தியானம் செய்கிறேன்.

பயோம்போதேர்த்விபான் மம ஹ்ருதயமாயாஹி பகவன்
மணிவ்ராதப்ராஜத் கனக வரபீடம் பஜஹரே |
ஸுசின்ஹௌ தே பாதௌ யதுகுலஜநேநேஜ்மி ஸுஜலை :
க்ருஹாணேதம் தூர்வா பல ஜலவதர்க்யம் முராரிபோ || 2

யதுகுல திலகா ! நீ பள்ளி கொண்டுள்ள பாற்கடலை விட்டு, என் இருதயத்தை கனகாசனமாக ஏற்றுக் கொள்வாயாக. உனது புனிதமான திருவடிகளை சுத்த ஜலத்தால் அபிஷேகம் செய்கிறேன். அருகு, பழம், தீர்த்தம் ஆகியவைகளுடன் அர்க்கியம் ஏற்றுக் கொள்வாயாக.

த்வமாசாமோபேந்த்ர த்ரிதசஸரிதம்போ (அ) திஶிஶிரம்
பஜஸ்வேமம் பஞ்சாம்ருத பலரஸாப்லாவ மகஹன் |
த்யுனத்யா : காலிந்த்யா அபி கனககும்ப ஸ்திதமிதம்
ஜலம் தேன ஸ்நானம் குரு குரு குருஷ்வாசமனகம் || 3

கங்கா தீர்த்தத்தால் ஆசமனமும், அபிஷேகமும், புனராசனமும் செய்விக்கிறேன். தங்கக்கோப்பையில் பஞ்சாமிர்தத்தை அளிக்கிறேன்.

தடித்வர்ணே வஸ்த்ரே பஜவிஜய காந்தாதி ஹரணம்
ப்ரலம்பாரிப்ராதர் ம்ருதுலமுபவீதம் குருகலே|
லலாடே பாடீரம் ம்ருகமதயுதம் தாரய ஹரே
க்ருஹாணேதம் மால்யம் சததல துலஸ்யாதிரசிதம்|| 4

ஹரியே! மின்னொளி ஆடைகளையும், மிருதுவான பூணூலையும், புனுகு சந்தனத்தையும், தாமரை துளசி மாலைகளையும் சமர்ப்பிக்கின்றேன்.

தசாங்கம் தூபம் ஸத்வரத சரணாக்ரே (அ)ர்ப்பிதமிதம்
முகம் தீபேனேந்து ப்ரபவரஜஸா தேவ கலயே|
இமௌ பாணீ வாணீ பதிநுத ஸகர்ப்பூரரஜஸா
விசோத்யாக்ரே தத்தம் ஸலிலமித மாசாமந்ருஹரே|| 5

பிரமன் வணங்கும் பெருமானே! உன் திருவடிகளுக்கு சாம்பிராணி தூபமும், முக கமலத்துக்கு இந்து நிகர் தீபமும், கரங்களுக்கு கற்பூர ஒளியும், ஆசனத்தற்கு தீர்த்தமும் அளிக்கிறேன்.

ஸதா த்ருப்தான்னம் ஷட்ரஸவதகில வ்யஞ்ஜனயுகம்
ஸுவர்ணமத்ரே கோக்ருதஷகயுக்தே ஸ்திதமிதம்|
யசோதாஸூனோ தத்பரமதயயாசான ஸகிபிः
ப்ரஸாதம் வாஞ்சத்பிः ஸஹ ததனு நீரம் பிப விபோ|| 6

யசோதை இளஞ்சிங்கமே! தொன்னையில் நெய்யுடன், பலவகை கறிகாய்களுடன், தங்கப் பாத்திரத்தில் உள்ள அன்னத்தை உமக்களிக்கிறேன். உமது ப்ரஸாதத்தை விரும்பும் அன்பர்களுடன் நீர் அதை உண்ண வேண்டும்.

ஸசூர்ணம்—தாம்பூலம்—முகருசிகரம்—பக்ஷய—ஹரே
பலம்—ஸ்வாது—ப்ரீத்யா—பரிமளவதாஸ்வதாய—சிரம்|
ஸபர்யாபர்யாப்த்யை—கனகமணிஜாதம் | ஸ்திதமிதம்
ப்ரதீபைராரார்த்திம்—ஜலதிதன யாச்லிஷ்ட ரசயே|| 7

லக்ஷ்மீகாந்தா! இந்தப் பழங்களை ருசிப்பாயாக. தாம்பூலத்தைப் போட்டுக் கொள். தீபத்துடன் உனக்கு ஹாரத்தி செய்கிறேன்.

விஜாதீயை: புஷ்பைரதிஸரபிபிர் பில்வ துளஸீ
யுதைச்சேமம் புஷ்பாஞ்ஜலி மஜித தே மூர்த்னி நிததே|
தவ ப்ராதக்ஷிண் யக்ரமணமக வித்வம்ஸி ரசிதம்
சதுர்வாரம் விஷ்ணோ ஜனிபதகதிச்ராந்த விதுஷா|| 8

ஜகந்நாதா! பில்வம், துளஸீ முதலிய புஷ்பங்களால் நான் உனக்கு புஷ்பாஞ்ஜலி செய்கிறேன்.

நமஸ்காரோ (அ)ஷ்டாங்க: ஸகல துரித த்வம்ஸனபடு:
க்ருதம் ந்ருத்யம் கீதம் ஸ்துதிரபி ரமாகாந்த த இமம்|
தவ ப்ரீத்யை பூயா தஹமபி ச தாஸஸ்தவ விபோ
க்ருதம் சித்ரம் பூர்ணம் குருகுரு நமஸ்தே(அ)ஸ்து பகவன்| 9

லக்ஷ்மிநாயகா! அஷ்டாங்க நமஸ்காரமும், நர்த்தனமும், கானமும் செய்கிறேன். பூஜையில் ஏற்படும் தவறுகளைப் பொறுத்து அதைப் பூர்ணமாகச் செய்ய வேண்டும்.

ஸதா ஸேவ்ய: க்ருஷ்ண: ஸஜலகனநீல: கரதலே
ததானோ தத்யன்னம் ததனு நவநீதம் முரலிகாம்|
கதாசித் காந்தானாம் குசகலச பத்ராலிரசனா—
ஸமாஸக்தம் ஸ்நிக்தை:ஸஹ சிசு விஹாரம் விரசயன்| 10

நீலமேக, ச்யாமள வண்ணனை, நெய், தயிர் ஆகியவைகளை கரங்களில் கொண்டு விளங்குபவனை, கோபியர்களின் ஸ்தனங்களில் பத்ரரேகை எழுதுவதில் விருப்பமுள்ளவனை, ஸ்ரீ கிருஷ்ணனை நான் எப்பொழுதும் வணங்குகிறேன்.

சிவ மானஸ பூஜை

ஆராதயாமி மணிஸந்நிப மாத்மலிங்கம்
மாயாபுரீ ஹ்ருதய பங்கஜ ஸந்நிவிஷ்டம்|
ஶ்ரத்தா நதீவிமல சித்த ஜலாபி ஷேகை:
நித்யம் ஸமாதிகுஸுமை: ந புனர்பவாய|| 1

சரீரமாகிய மாயாபுரியின் இருதய கமலத்திலுள்ள, மணிபோல் விளங்கும் ஆத்மலிங்கத்தை, பிறவிப் பிணியகல, ச்ரத்தை என்ற நதியிலுள்ள சுத்த சித்தம் என்ற தீர்த்தத்தினால் அபிஷேகம் செய்து, ஸமாதி என்ற மலரை அர்ச்சிக்கிறேன்.

ரத்னை: கல்பிதே மாஸனம் ஹிமஜலை: ஸ்நானம் ச திவ்யாம்பரம்
நானாரத்னவிபூஷிதம் ம்ருகமதாமோதாங்கிதம் சந்தனம்|
ஜாதீசம்பக பில்வபத்ரரசிதம் புஷ்பம் ச தூபம் ததா தீபம்
தேவ தயாநிதே பசுபதே ஹ்ருத்கல்பிதம் க்ருஹ்யதாம்|| 2

அருட்கடலே! ரத்னாஸனமும், கங்கா தீர்த்த ஸ்நானமும், புனிதமான ஆடைகளும், ரத்னாபரணங்களும் ஜாதீ, சம்பகம், வில்வம் முதலான மலர்களும், தூப தீபங்களும் மானஸீகமாகவே உமக்கு அளிக்கின்றேன்.

ஸௌவர்ணே நவரத்ன கண்டரசிதே பாத்ரே க்ருதம் பாயஸம்
பக்ஷ்யம் பஞ்சவிதம் பயோததியுதம் ரம்பாபலம் பானகம்|
சாகநாமயுதம் ஜலம் ருசிகரம் கர்பூர கண்டோஜ்ஜ்வலம்
தாம்பூலம் மனஸா மயா விரசிதம் பக்த்யா ப்ரபோ ஸ்வீகுரு|| 3

நவரத்தின மிழைத்த பொன் பாத்திரத்தில் பஞ்சவித பக்ஷணங்களும் கறி வகைகளும், கனி முதலானவைகளும், பச்சைக் கற்பூரம் கலந்த தாம்பூலமும் பக்தியுடன் சமர்ப்பிக்கின்றேன்.

சத்ரம் சாமரயோர்யுகம் வ்யஜனகம் சாதர்சகம் நிர்மலம்
வீணாபேரி ம்ருதங்க காஹல கலாகீதம் ச ந்ருத்யம் ததா|
ஸாஷ்டாங்கம் ப்ரணதி: ஸ்துதிர் பஹுவிதா ஹ்யேதத் ஸமஸ்தம் மயா
ஸங்கல்பேன ஸமர்ப்பிதம் தவ விபோ பூஜாம் க்ருஹாண ப்ரபோ|| 4||

வெண்குடை, விசிறி, கண்ணாடி, வீணை, பேரி, மிருதங்கம் ஆகியவைகளுடன் கானம், நர்த்தனம், சாஷ்டாங்க நமஸ்காரம் ஸ்தோத்ரம் இவைகளை மானஸீகமாகவே அளிக்கிறேன்.

ஆத்மாத்வம் கிரிஜா மதி : ஸஹசரா : ப்ராணு : பரீரம் க்ருஹ
பூஜா தே விஷயோப போகரசனு நித்ரா ஸமாதி ஸ்திதி :||
ஸஞ்சார : பதயோ : ப்ரதக்ஷிணவிதி : ஸ்தோத்ராணி ஸர்வா கிரோ
யத் யத் கர்ம கரோமி தத் ததகிலம் பரம்போ தவாராதனம்|| 5||

என்னுடைய ஆத்மா நீ; புத்தி பார்வதி; பஞ்ச பிராணன்கள் நண்பர்கள்; சரீரம் வீடு; விஷய போகங்களே உமக்குச் செய்யும் பூஜை; தூக்கம் சமாதி நிலை; நடத்தலே ப்ரதக்ஷிணம்; பேசுவ் தெல்லாம் உமது ஸ்தோத்திரங்கள்; நான் செய்யும் அனைத்துமே உனது ஆராதனையாகும்.

கர சரணக்ருதம் வாக்காயஜம் கர்மஜம் வா
ஶ்ரவண நயனஜம் வா மானஸம் வாபராதம் |
விஹிதமவிஹிதம் வா ஸர்வமேதத் க்ஷமஸ்வ
ஜயஜய கருணாப்தே ஸ்ரீ மஹாதேவ பரம்போ || 6||

கருணாகர மூர்த்தியே! மஹாதேவா | ஞானேந்த்ரிய, கர்மேந் திரியங்களால், வேதத்தில் சொல்லப்பட்டதான கர்மாவைச் செய்யா மைக்கும். சொல்லப்படாததான கர்மாவைச் செய்தமைக்குமான அபராதத்தை பொறுத்து அருள் புரிவீராக.

(விஷ்ணு பூஜை, சிவ மானஸ பூஜை இயற்றியவர் ஆதிசங்கரர்)

ஸுப்ரஹ்மண்ய மானஸ பூஜை

குகாரோ ஹ்யாக்யாதி ப்ரபலமநிவார்யம் கில தமோ
ஹகாரோ ஹானிம் ச ப்ரதயதிதராமேவ ஜகதி |
அதோ மோஹாந்தத்வம் பிதிலயதி யந்நாம குஹ இதி
அமும் தேவம் த்யாயாம் யபிலஷித ஸந்தான நிபுணம் || 1||

'கு' என்னும் அக்ஷரம் அறியாமையையும், 'ஹ' எனும் அக்ஷரம் நாசத்தையும் குறிக்கும். அறியாமையைப் போக்குவது என்பது பொருள். அறியாமையைப் போக்கும் 'குஹன்' என்ற நாமத்தை நான் தியானம் செய்கிறேன்.

ஸமாஶ்லிஷ்டம் வல்யா ஸமுபகடிதம் பாஹுவிடபை |
ஸ்வமூலாயாதானும் ஸமுசித பலப்ராபணசணம் |
ஸ்வஸேவானிஷ்டானும் ஸததமபி ஸௌக்யோப கமகம்
ஸநா த்யாயாம் யேனம் கமபி து குஹாக்யம் விடபினம்|| 2||

வல்லிக் கொடியால் தழுவப்பட்டு, புஜமாகிற கிளைகளைக் கொண்டு, அண்டியவர்க்கு ஆனந்தமளிக்கும் அந்த 'குஹன்' என்ற விருக்ஷத்தை நான் தியானம் செய்கிறேன்.

ஸுராணும் ஸங்காதை : ஸமுபகதை : ஸாந்த்ர குதுகை :
ஸமாராத்ய ஸ்வாமின் பஜ விஹித மாவாஹனமிதம் |
ஸமந்தாத் ஸத்ரத்னை : ஸமுபஹித ஸோபானரணி—
ஸ்புரன்ஸுணுஸோபம் ரசிதமபி ஸிம்ஹாஸனமிதம் || 3||.

தேவர்கள் போற்றும் தீரனே! உன்னை நான் ஆவாஹனம் செய்து, சிம்மாஸனம் அளிக்கிறேன்.

ஹ்ருதம் கங்காதுங்காத் யகிலநடினிப்யோ(அ)திவிமலம்
ஸுதீர்த்தம் பாத்யார்த்தே தவ நிஹிதமங்கீகுரு விபோ |
ததா புண்யைஸ் தீர்த்தைர் விஹிதமிதமர்க்யாசமனகம்
தயார்த்ராம் த்ருஷ்டிம் மே திஶதிஶ தயாப்தே ஹரஸுத|| 4||

சிவ குமாரா! நான், உமது பாத்யாசமனங்களுக்கு கங்கை, துங்கை முதலான புனித நதிகளின் தீர்த்தத்தை கல்பிக்கிறேன்.

ஸமந்தாத் ஸ்நானீயை : பரிமல குணோத் கர்ஷ பரிதை :
ஸ்புரன் மாணிக்யாதி ப்ரதி கசிதஸத் ரத்ன பலகே |
ஸமாஸீனம் ஹி த்வாம் ஸுசிரமபிஷிஞ்சன்ன ஸுலபம்
பரானந்தம் யாஸ்யாம்னு பதிக்குபாப்தே ஹரஸுத || 5||

குமரா! நீ இயற்கையிலேயே கருணைக்கடல். ரத்னப் பலகையில் அமர்ந்துள்ள உனக்கு, வாசனைத் திரவியங்கள் கலந்த நீரால் அபிஷேகம் செய்து, பெறுதற்கரியதான பேரின்பமடைவேன்,

ஸுவாஸோபிஶ்சாங்கம் தவ கில ஸமாச்சாத்ய ஸபதி
ப்ரஸாத்யாம்ஸே ஶுப்ரம் விமலமுபவீதம் நவகுணம் |
ப்ரபூதாம்ஸ்தே கந்தான் கிரிஶஸுத ஸந்தாய நிடிலே
ஸுகாஸீனம் ஹி த்வாம் நனு கலு தித்ருக்ஷே சபலதீ: || 6||

நல்ல அடைகளால் அலங்கரித்துக் கொண்டு. கழுத்தினில் பூணூலும் நெற்றியில் சந்தமும், அணிந்துக்கொண்டு விளங்கும் உன்னை எப்பொழுதும் தரிசித்துக் கொண்டேயிருப்பேன்.

கிரீடாஞம் ஷட்கம் தவ ஹி கலயன் ஷண்முக ஶிரஸ்—
ஸ்வத க்ரீவாயாம் தே ஸமனுகடயன் ஹாரலதிகாம் |
லலாடேஷ் வாதன்வன் திலகமத தே குண்டலகணம்
ஸமர்க்கஶ்ரோத்ரேஷு க்ஷணமபி தித்ருக்ஷே பவ
ஸுத || 7||

ஷண்முகா! உன் தலைகளுக்கு கிரீடங்களையும், கழுத்துக்கு முத்துமாலையும், காதுகளுக்கு குண்டலமும். நெற்றிக்குத் திலகமும் அணிவித்து, உன்னை நான் பார்க்க ஆசைப்படுகிறேன்.

அமந்தைர் மந்தாரத்ரும குஸுமஸங்கை : ஸுரபிலை :
ஸமர்ச்சன் ஸாமோதம் தவ ஹி ஸுகுமாராங்க மகிலம் |
ஸமந்தாத் ஸம்ப்லாவாம் தவ வதன ஸௌந்தர்ய லஹரீம்
ஸதா ஸ்மாரம் ஸ்மாரம் ஸபலயிதுமீஶே ஜனிமிமாம் || 8||

உன் திருமேனியை மந்தாரை மலர்களால் அர்ச்சிப்பேன். எழில் ஒழுகும் உன் முகத்தைப் பார்த்து, இப்பிறவியை பயனுள்ள தாக்கிக் கொள்வேன்.

ஸுமாஜிக்ர ஸ்வாமின் அகருயுததூபம் கருணயா
ஜிக்ருக்ஷஸ்வாபீமான் அமலக்ருத தீபானு பஹ்ருதான் |
க்ருஹாணாஜ்யப்லாவான் ம்ருதுலதர பக்ஷ்யாணி விவிதான்
யுபாதத் ஸ்வாப்யன்னம் விவிதமத பஞ்சாம்ருதமபி || 9||

தூப, தீபங்களையும், பக்ஷணங்களையும், அன்னங்களையும், பஞ்சாமிர்தத்தையும் உனக்கு மானஸீகமாக அளிக்கிறேன்.

ஸகர்ப்பூர ஸ்வாதுக்ரமுகயுத மேலாதி கலிதம்
ஸுதாம்பூலம் ஸ்வாமின் ஸதயமுப க்ருஹ்ணீஷ்வ ம்ருதுலம்|
ததஸ்தே கர்ப்பூரை : ஸுரபிதர நீராஜன விதிம்
ப்ரகுர்வன்னுதாஸ்யே தவஶிரஸி புஷ்பாஞ்ஜலிமபி || 10||

பச்சைக் கற்பூரம், கிராம்பு, ஏலம் ஆகியவைகளுடன் தாம்பூலமும், கற்பூர நீராஜனமும், புஷ்பாஞ்ஜலியும் சமர்ப்பிக்கின்றேன்.

கரோமி ஸ்வாமிம்ஸ்தே நிகிலமுபசாரம் ப்ரவணதீ :
தயார்த்ராஸ்தே த்ருஷ்டிர்விகிர கிரிஜாநந்தனமயி |
ஸமந்தாத் ஸம்ஸ்ார வ்யஸனகலுஷீ பூதஹ்ருதயம்
பரித்ரா-யஸ்வாபாரா பர-வஶிதமாபன்ன-மபி மாம் || 11||

மலைமகள் மகனே! பக்தியுடனும், பிரியமுடனும் நான் எல்லா உபசாரங்களையும் உனக்கு செய்கிறேன். பிறவிப் பெருந்தளையி லிருந்து என்னைக் காப்பாற்றுவாயாக.

இமாம் சேத : பூஜாம் ஶ்ரவண புவோ ய : கில படேத்
ஸ க்ருத்வா அன்யைர் கீதம் ஸபதி ஶ்ருணுயாத் பக்தி பரித : |
ந தம் ஸம்ஸாராபாரா பரவஶயதே நாபி விஷயா :
க்ரமாத் புண்யாத்மாயம் நனு பஜதி கைவல்யபதவீம் || 12||

இந்த ஷண்முகமானஸ பூஜையை எவரொருவர் பக்தியுடன் ஒரு தடவை படிக்கிறரோ, அல்லது கேட்கிறரோ, அவரைப் பிறவிப் பிணி அணுகாது. உலக விஷயங்கள் பற்றாது. முறைப்படி வீடுபேறு அடைவார்.

(கணேச மானஸ பூஜை, சுப்ரமணிய மானஸ பூஜை—இயற்றியவர் சந்திரசேகர ஸ்வாமிகள்.)

ப்ரஹ்மஞானி செங்கோட்டை ஆவுடையாரம்மாள் இயற்றிய மானஸீக பூஜா ஸ்தோத்திரங்கள்.

ஆவுடையாரம்மாள்—இவர் ஒரு ப்ரஹ்ம ஞானி. இந்த புத்தகத்தின் ஆசிரியர் ஸ்ரீ நஜன் அவர்களது தந்தை ஸ்ரீ சுவாமிநாத ஐயர் அவர்களுடைய குரு. தென்னாட்டில் ஸ்ரீ வித்யையை பரப்பிய ஸ்ரீ சிதானந்த நாதருன் காலத்துக்கு முற்பட்ட இவர், அக்காலத்திலேயே பாமரமக்களும் ஸ்ரீவித்யையில் ஊக்கம் பெற்று நன்னெறியில் வளர வேண்டும், வாழ வேண்டும், என்ற தளராத நம்பிக்கையுடன். எல்லோரும் புரிந்துகொள்ளக் கூடிய எளிய, இனிய தமிழ் நடையில் எழுதிய வேதாந்த பாடல்கள் எண்ணிலடங்காதவை. அவ்வாறு அவர் எழுதியவைகளில் சில முக்கியமான மானஸீக ஸ்தோத்திரங்களை மட்டும் இங்கு வாசகர்கள் பயன்பெறும் வகையில் கொடுத்திருக்கிரும்.

பெண்களுக்கு ஸ்ரீ வித்யையில் பெரும் பங்கு உண்டு என்பதற்கு ஆவுடையாரம்மாள் அவர்களே சான்ருவார்கள்.

வேதாந்தத் திருவனந்தல் அல்லது பரமாத்மா திருப்பள்ளியெழுச்சி

மதுக்ஷீரம் பலவகைகள் நாளிகீரம் இக்ஷுகண்டம்
நல்லமோதகப் பணியாரவகைகள்
ஆதரவாய் நான் படைப்பேன் ஆவுடையாள் திருமகனே
மரகதமான கணபதி காப்புதானே. 1

சந்ததமும் என் நாவில் வந்துதவி செய்யும் அம்மா
காயாம்பூ சரஸ்வதியே ச்யாமளேயே
தக்ஷிணாமூர்த்தியே ஸ்ரீகுருயோகியே
சுவாமின் சமாதி கொலுவோ! 2

ஜீவன் முக்தர்களின் உதயகாலம்

அஞ்ஞான இருள் பிரிந்து, அறிவருணோதயமாகின்றது
விஞ்ஞான சூரியன் உதித்தார்
ஜாக்ர ஸ்வப்ன ஸுஷுப்தி என்ற ராத்திரி மூன்றுங்கழிந்து,
ஸ்வானுபோக உதயமானேன் ஐயாவே! 3

ஜோதிர்மயமாகும் விநாஷம் ஜொலித்து மலர் சொரிகிறது
திடக்கியான பரிபக்குவமாகின்றது
வைராக்யக் குயிலினங்கள் (ஞான) மதுஸாரக்களிகோதி
தத்வமஸி என்று கூவி நிற்கின்றது. 4

ஓங்காரமான தென்றல்வாடை நன்ருய் வீசுகின்றது .
சுயஞ்ஜோதி ஆதித்யனுதித்தார்
பரிபூர்ண மேடைமேல் பராபர ஹம்ஸங்கள்,
நற் பிரணவ பலனைப் புஜித்து, 5

ஹம்ஸோக, சிவோக பாவனைகள் பண்ணியே
அஹம்பிரும்மைவாஹ மென்று கூறி நிற்கின்றது.
தக்ஷிணாமூர்த்தியே ஸ்ரீகுருயோகியே
சுவாமின் சமாதி கொலுவோ! 6

மஹத்துக்கள், பிரம்மநிஷ்டாள், பாலவிருத்தாள் மஹாயோகி
குருசுவாமியின் தரிசனம் தேடி நிற்கின்ருர்கள்
அகண்டாகாரரூப ஆனந்த லக்ஷ்மியுடன்
ஐக்கிய போகமோ சுவாமின் குருவே ! 7

காம க்ரோத லோப மோக மதமாச்சர்ய மமதைடம்பம்
அவித்தையுடன் ஆங்காரம் ஈஷணைகள் மூன்று
இந்த விபரீதச் சத்ருக்களை வேர்களைந்து நான்ஜெயித்து
ததாகார ராஜ்ய ஜயமானேன் ஐயாவே! 8

உபதேச தாரகக் கிருபையான அருக்கன் உதித்தவுடன்,
ததாகாரமான வெளியானேன் ஐயாவே!
தக்ஷிணாமூர்த்தியே ஸ்ரீகுருயோகியே
சுவாமின் சமாதி கொலுவோ ! 9

ஜீவன் முக்தர்களின் உதயஸ்தனம்—ஜெபம்

சாதன சதுஷ்டயாள் சத்புருஷாள் மஹாயோகி
தங்கள் சத்தான பத்தினிகளுடனே
ஸச்சிதானந்த நதியில் நித்தியம் நீராடி
சத்தியமென்ற காயத்ரி ஜபித்து, 10

நிஷ்காம்யமாகவே நித்ய கர்மந்தனைப் பண்ணி
பிரும்மார்ப்பணங்கள் செய்து நிற்கின்ருர்கள்.
தக்ஷிணாமூர்த்தியே ஸ்ரீ குரு யோகியே
சுவாமின் சமாதி கொலுவோ! 11

ஜீவன் முக்தர்களின் அக்னிஹோத்ரம்

லக்ஷணத் திரயங்களென்னும் மதன தண்டந்தனைப் பிடித்து,
தற்பத துவம்பத மென்ற அரணிக்கட்டையில்
சிரவனமனன நிதித்யாசனத்தால் மதனம்பண்ணி ஜ்வாலையாக்கி,
சாக்ஷாத்கார ஜ்வாலை வளர்த்து— 12

அகண்டாகாரமென்ற அக்கினி குண்டத்தில்
ஆஹுதிகள் பண்ணி நிற்கிறாள்,
தக்ஷிணாமூர்த்தியே ஸ்ரீ குரு யோகியே
சுவாமின் சமாதி கொலுவே! 13

ஜீவன்களின் முக்தர்களின் யாகம்

ஜீவேச்வரனென்ற தீக்ஷிதரும் அத்வர்யுவும்
சின்மாத்ர யாகம்பண்ண தீக்ஷை வகித்து,
ஆகாம்ய ஸஞ்சித வர்ணாசிரமங்களென்ற
நாமரூப கர்மப் பிராப்த பசுவை 14

ஞானமென்ற பரசுனால் கண்டங் கண்டமாய் துணித்து,
ஜோதியாகும் வபையை எடுத்து
ஞானயோக சமாதியினால் பிரபலாக்கினி வளர்த்து
பரிபக்குவமாகச் சமைத்து,— 15

புண்ய பாவங்களென்ற ஆச்சியந்தனைச் சொரிந்து
புரோடாஸ பிண்ட ஹவிஸை
அகண்டாகாரமென்ற அக்னி குண்டத்தில்
ராஜயோக ஆத்வர்யர்கள் சூழ 16

ஹம்ஸோஹம்ஸோக மென்று அவயமிட்டுக் கோஷமாய்
ஆஹுதிகள் பண்ணி நிற்கிறாள்
தக்ஷிணா மூர்த்தியே ஸ்ரீ குருயோகியே
சுவாமின் சமாதி கொலுவே! 17

ஜீவன் முக்தர்களின் பூஜை

ஜோதிர் மயமாய் ஜ்வலித்து லாவண்யமாய் விளங்கும்
சாக்ஷாத்காரஸ்படிக லிங்கத்தை
சித்தான் திடஞ்ஞானி சனகாதி யோகியர்கள்
தியான யோக சமாதியினாலே 18

தானே விசாரித்து ஸ்வானுபோக அனுபோகத்தால்
ஆவாஹனமும் பண்ணி
ஜன்ம மிருத்யு ஜரைவியாதி கர்மபந்தம் அஞ்ஞான
நிர்மால்யந்தன்னைக் களைந்து, 19

நிர்க்குண நிர்விகற்ப நிரஞ்சன சிம்ஹாஸனத்தில்
அலங்கரித்து எழுந்தருளப் பண்ணி
சுத்தோதகமாகும் சத்தியகங்கை கொண்டுவந்து
தாராபிஷேகங்கள் பண்ணி,— 20

ஜோதிர்மயமாய் ஜ்வலித்து தாவள்யமாய் விளங்கும்
　　பீதாம்பரமுஞ் சாற்றி
விபுவாய் நிறைந்தவர்க்கு விபூதி ருத்திராக்ஷம்
　　யக்ஞோப வீதமும் சாற்றி,— 21

அதி சீதளமாயிருக்கும் பரிமளகந்தங்கள்
　　அலங்காரமாகப் பூசி
சத்து சித்தானந்தக் கிரீடகுண்டம் கண்டஸரம்
　　சர்வாபரணங்கள் பூட்டி,— 22

ஆதியந்தமற்றவர்க்கு அர்க்யங்கள் தான் கொடுத்து
　　அன்பெனும் மலர்தனைச் சாற்றி
அகண்டாகாரமான தூப தீபம் காட்டி
　　அக்ஷதை திலகமும் சாத்தி, 23

அண்டரண்ட பிர்ம்மாண்ட யுகயுகப் பிரளயங்களை
　　மஹா நைவேத்தியமாகப் பண்ணி
ஹம்ஸோஹஸோஹ மென்ற கற்பூர தீபங்காட்டி
　　ஐக்கிய நமஸ்காரமும் பண்ணி,— 24

தக்ஷிணாமூர்த்தியே (சுவாமி) வடிவாக வந்தென் செவியில்
　　தாரகோபதேசம் செய்தபின்
நித்தியானந்தமடைந் திந்ததேகந்தனை மறந்து
　　நிராகார வெளியானேன் ஐயாவே! 25

தக்ஷிணாமூர்த்தியே ஸ்ரீ குரு யோகியே!
　　சுவாமின் சமாதி கொலுவோ!

ஸ்ரீ கிருஷ்ண பகவான்
பாண்டவர்களுக்கு உபதேசித்த
மானஸீக பூஜை

சந்ததமும் சிந்தையினில் சிவசங்கரரைக் கண்டுகொண்டு
　மங்கள மாகவேதான் மானஸீக பூஜைசெய்து,
சாம்ப பரமேச்வரரை சரணம் என்று நீரடைந்தால்
　பூலோகம் சைவசமாய் புவனமெங்கும் ஆண்டிடுவீர்
காலாந்தம் தன்னில் கைலாசம் சேர்ந்திடுவீர்
　பூஜைபண்ணுமென்று சொன்னார் புண்ணிய புருஷோத்தமரும்.
ஆதிசிவன் மஹிமையை யாரும் அறியார்கள்
　யாராலும் அவர்மஹிமை அறியமுடியாது
ஆத்மாவை ஜீவன் அறிந்தவிதம் சொல்லுகிறேன்.

ஆவாஹனம்

தேஹமே ஆயயமாய் ஜீவனே ஈஸ்வரனுய்
அகத்திலிருக்கும் அலர்ந்த செந்தாமரையில்
புத்தியினுல் அறிந்து ப்ரஹ்மம் தனை யடைய
ஐந்து பூதங்களினுல் அலேயும் மன வாயுவை
கண்டத்திலே நிறுத்தி கண்ணுடிபோல் விளக்கு
அண்டமெனும் பிண்டமதில் அகிலமெல்லாம் கண்டுகொண்
டேன்.

பதினுன்கு உலகமுடன் பலநதியும் ஸாகரமும்,
தேவாலயமும் சிவனிருந்தம் மண்டபமும்.
தன் இருதயந் தன்னில் சகலமுமாய் பாவித்தேன்.
கல்வருஷம் பேய்ந்து கனவெள்ளமாய் ஓடி,
ஆறும், அருவிகளும் வாய்க்காலும் ஓடைகளும்,
கங்கா நதியுடனே சமுத்திரத்தில் போய் விழுந்தால்—
அந்த—ஜலங்களை வெவ்வேருய் பிரித்திடலாகாது

அதுபோல

ஜீவன் முத்தி யடைந்தால் திரும்பஜென்ம மிருக்காது
சூரியன் உதித்து ஜெகங்கள் வெளியானுற்போல்
இருளான மாய்கைதள்ளி இருதயவெளி கண்டு
திடமாக பக்திபண்ணி சிவன்மேல் கருத்து முண்டாய்
அதுவே பழக்கமதாய் அனுபோக முண்டாகில்
இதுவே சிவத்யானத்திற் கேதுவென்ருர் மாதவரும்.
அலேயும் மனவாயுவை ஆருதாரம் நிறுத்தி
ஆருதார மூலத்தில் அம்பிகையைக் கண்டு கொண்டு
அனலால் விளக்கி அமிர்தமழையில் மூழ்கி
அநாகத சக்ரத்தில் அரனே அறிவாலறிந்து
தேவாதிதேவன் சிவனை உமையுடனே
அன்பெனும் பொற்றளத்தின் மேலே அழகுபெற
செர்பொன்னும் ரத்தினமும் இழைத்த சிங்காதனத்தில்
இருதய சிங்காதனத்தில் ஈஸ்வரனேக் கண்டு கொண்டேன்.
மணிப் பிரகாசம்போல் மாலே விளக்கேற்றி வைத்தேன்.
மல்லிகை பூத்தாற்போல் வரிசை விளக்கேற்றி வைக்தேன்.
ஐர்பூத கன்னிகையால் ஆரத்தியும் எடுத்தேன்
கண்டாமணி அடித்தேன் கைலாச நாதருக்கு

அபிஷேகம்

சிந்தையிற் குள்ளே சிவபூஜை பண்ணவிருந்தேன்
அகஸ்தியர் வேதமுனி அந்தவனி மாதவர்கள்

ஸப்தரிஷிகள் கலசபூஜை பண்ணிநிற்க
தேவரிஷிகள் சிவருத்ரம் தான்ஜபிக்க
கற்பக விருக்ஷம் கனகவர்ஷம் சொரிய
அற்புதமாய் காமதேனு ஆவும் பாலைச் சொரிய
பொற்குடத்தில் பாலமிர்தம் போதமுடன் ஏந்திவந்து
அம்பிகைக்கும் ஈஸ்வரர்க்கும் அபிஷேகம் பண்ணிவைத்தேன்.
சொர்ண கலசத்தால் சுத்தோதகம் சொரிந்தேன்
கொம்பிலுள்ள தேனும் கோது இலாச் சர்க்கரையும்
காராம்பசு நெய்யும் கதலி பழத்துடனே
சேர்ந்து கலந்து சிவன்முடியிலே சொரிந்தேன்
கிச்சிலி நார்த்தையுடன் எலுமிச்சையின் ரசமும்
சேர்ந்து பிழிந்து ஸ்வர்ணக் கிண்ணத்திலெடுத்து
சுந்தரமூர்த்தி சிரஸிலே தான் சொரிந்தேன்.
நெல்லியுடன் சீயக்கரயையும் நிறையவே சாத்தினேன்
மஞ்சளுடன் வாசனையும் மாக்காப்பு சாத்தினேன்,
பன்னீரும் சந்தனமும் பக்தியுடன் சாத்தினேன்
கற்பூரஹாரத்தி செய்தேன் கைலாச நாதருக்கு
ஏழு சமுத்திரத்தை இருதயத்திலே அழைத்து
ஸப்த சமுத்திரத்தை தன் மனதிலே கொணர்ந்து
அறுபத்காறுகோடி அற்புத தீர்த்தமெல்லாம்
மானஸீகத்தால் அழைத்தேன் மஹாநதி தீர்த்தமெல்லாம்
ருத்ராபிஷேகம் ஈசருக்கு பண்ணி வைத்தேன்
கும்பாபிஷேகம் கௌரிநாதருக்கு பண்ணி வைத்தேன்.
பூர்ணாபிஷேகம் பக்தியுடன் பண்ணிவைத்தேன்
சங்காபிஷேகம் சங்கரர்க்கு பண்ணிவைத்தேன்
சுத்தகங்கா ஜலத்தால் திரும்பவும் பண்ணிவைத்தேன்
துளிர்போன்ற பட்(டு)அதனால் துவட்டி அம்பர் மேனிதன்னை

ஆபரணம் அலங்கரித்தல்

மாணிக்க பூஷணமும் மார்புதனில் சந்தனமும்
தேவரிடை மருங்கில் செம்பொன் பீதாம்பரமும்
அங்கியுடன் தொங்கும் அசையும் முப்புரிநூலும்
யக்ஞோபவிதமும் உத்தரீயம் சால்வைகளும்
பட்டாடை அரைஞாணுடனே ஒட்டியாணக் கட்டமுகும்
ருத்திராக்ஷமாலை ஈஸ்வரர்க்கும் பார்வதிக்கும்
நவரத்தினத்தால் இழைத்த பதக்கத்தி லாயிரமும்
செம்பொன் மணிக்கிரீடம் சங்கரர்க்கும் பார்வதிக்கும்
மங்களமாய் பூமுடிமேல் வைத்து அலங்கரித்தேன்.
மணியிழைத்த பாதுகையும் மலரடியில் சாத்திவிட்டேன்
அர்ச்சிக்க ஸ்வர்ணபுஷ்பம் அன்புடனே கொண்டுவந்தேன்.

புஷ்பம் அலங்கரித்தல்

பச்சைத் துளஸியும் பாரிஜாத மலரும்
மட்டற்ற வேர்க்கொழுந்தும் மணமுள்ள மல்லிகையும்
வில்வபத்திரத்தில் கோடி பர்வதம்போல் குவித்தேன்
சங்கரர்க்கும் பார்வதிக்கும் சாற்றி அலங்கரித்தேன்.

நைவேத்யம்

சாம்பிராணி தூபதீபம்சிவ சங்கரர்க்கும் பார்வதிக்கும்
வாசனையாய் எடுத்தேன் வணக்க ஒடுக்கத்துடன்
கண்டாமணி அடித்தேன் கைலாச நாதருக்கு
சுத்தோதகத்தாலே சுற்றினேன் நைவேத்யத்தை
அமிர்தேபத்ரணமஸி என்று ஆபோஜனம் போட்டேன்
பக்தியுடன் பிராணுயஸ்வாஹா பண்ணிவைத்தேன் ஆறுதரம்
பூரணரும் கௌரியுடன் புசித்து திருப்தி யானபின்பு
பன்னீரால் வாயலம்பி பட்டாலே தான்துடைத்து
சொர்ணமணி தட்டதனில் சீவலுடன் வெற்றிலையும்
சாதிக்காய் ஏலமுடன் லவங்கம் ஜாதிபத்ரியும்
நீறுடனே வால்மிளகும் பச்சைக் கற்பூரம் குங்குமப்பூ
தாம்பூலம்தான் கொடுத்தேன் ஸர்வக்ஞ மூர்த்திக்கு
புனர்பூஜை பண்ணினேன் பூரண வடிவானவர்க்கு
பொற்பீடத்திற்குக் கீழிருந்து போற்றிப் பணிந்தேன்
பார்வதி நாதரைப் பணிந்து ஐக்யமடைந்தேன்.

ஸ்ரீ ரங்கநாத மானஸீக ஸ்தோத்திரம்

(சூர்ணிகை)

1. ஹேதேவா நாவின்னப்பமுலு நைகொனி நன்னு ரக்ஷின்பவே ரங்கேசா
நாசங்கல்ப விகல்பமுலு நீகு உபய காவேரி மத்யமுலு
2. நாதேகமுனு நீகு ஸ்ரீரங்க க்ஷேத்ரமு
நாசப்தாவரண முலுநீகுசப்தப் பிராகாரமுலு
3. நாரஜோகுண முலு நீகு ஹேமசிகர முலு
நாகர்வ முலுநீகு கருடகம் பமுலு
4. நாவிவேக முலு நீகு விமானஸ்தான முலு
நாகாமக்குரோத முலுநீகு கவர்ணசுவாடமுலு
5. (நா) ஞானவைராக்கியமுலு நீகு துவாரபாலகுலைனஜய விஜயலு
நாபுருஷா காரமுலு நீகு ஆகிருதி சயனமுலு

6. நா மோஹாஜாலமுலு நீகு பாதார்ச்சனஸ்ரீ துளஸீகுஸுமமுலு
நாஸுக சம்போகமுலு நீகுசந்தனுதி லேபனமுலு

7. நாமோகமுலு நீகு நவரத்ன கஜிதலமன கிரீடமுலு
நாஜாலமுலு நீகு கஸ்தூரி திலகம்புலு

8. நாவசனமுலு நீகு ஸகஸ்திர நாமமுலு
நாபக்தி சக்துலு நீகுநேனு வேஸின வனமாலா

9. நா சிரவண கீர்த்தனமுலு நீகு மகர குண்டலமுலு
நா ஞானேந்திரயமுலு நீகு நீராஞ்சன தூபதீபமுலு

10. நா கோலா ஹலமுலு நீகு கண்டாநாதமுலு
நா சுபாகபமுலு நீகு மஹாநைவேத்தியமுலு

11. நாரஸா கந்தமுலு நீகு தாம்பூலமுலு
நாசஞ்சாரமுலு நீகுபிரதக்ஷிணமுலு

12. நாசம்போக சயனமுலு நீகுபிரணு மம்முலு
நாவிவகாரமுலு நீகு ஸ்தோத்திரமுலு

13. நாசந்தோஷமுலு நீகு கருடாதி வாகனமுலு
நாகர்ணேந்திரியமுலு நீகு நிர்த்த கீத வாத்தியமுலு

14. நாசாக்கிர சொப்பன சுஷுப்துலு நீகுசத்ர சாமர ஆலா
வட்டமுலு
அந்தரங்கமுகா தீனி கைகொனி நன்னு ரக்ஷின்பவே
ரங்கேசா

15. நிவர்த்தகா தீனசரண்யா நிகிளஜக மாயா மோஹாந்தஹாரா
ரங்கநாயகிகுஜ கும்பபிரியா
ஸ்ரீரங்கநாதா நமஸ்தேநமஸ்தே நம:

ஜீவாத்மா அந்தர்முகமாகி ஆராய்ச்சி செய்து அறிவாகிய மணியை பரமாத்மாவிடம் சமர்ப்பித்தது

வேதாந்த—நொண்டிச்சிந்து

1. சாந்தநரசிம்மர் பாதத்திலே நான்
சரணமென்றனுதின மும்பணிந்தேன்
சரணமென்றே அடைந்தேன்—

2. பணிந்த பின்பென்னைப் பார்த்தார் தயாபரர்
பறந்ததே என்றன் கர்மமெல்லாம்
திரும்பியே வாராமல்—

3. தீர்த்தார் ஜென்மந்தை கார்த்தார் கருணையால்
பார்த்தார் பச்சைமரத் தாணிபோலே
ஆத்தாள் உதரம்விட்டு மாத்திருரே—

4. மாற்றில்லாத மறு பொருளைக்கண்டு நான்
மனது புளகித மானேனே
மறந்தேன் சரீரந்தன்னை—

5. ஆனேன் ஒரு வடிவானேன் குருபாதம்
நானே வலுபிடி யானேனே
நானே நளினபாதாம்புஜத்தை—

6. (பரி)பக்குவ மாச்சுதென்று பந்தயாபரர்
